# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 7
செய்தி 1
ஜுன் 2021
விலை ரூ 10/-


## பொது உடைமை போராளி
### தோழர்
# மைதிலி சிவராமன்



## வீர வணக்கம்
### மின் ஊழியர் மத்திய அமைப்பு



புதிதாக பொறுப்பேற்றுள்ள இயக்குநர் – விநியோகம் அவர்களை மத்திய அமைப்பின் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்



வடக்கு மண்டல தலைமை பொறியாளர் அவர்களை சந்தித்தபோது



திருச்சி மண்டல தலைமை பொறியாளர் அவர்களை சந்தித்தபோது



கோவை மண்டல தலைமை பொறியாளர் அவர்களை சந்தித்தபோது

# மின்கதிர்
செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**ஜூன் 2021**


**உள்ளே....**


- புதிய அரசும் தமிழக மின்ஊழியர்களின் எதிர்பார்ப்புகளும்
- பொதுவுடைமை போராளி தோழர் மைதிலி மறைவு
- தலைமைப் பொறியாளர்களை இடமாற்றம் செய்வது வளர்ச்சிக்கு உதவாது
- அகற்றப்பட வேண்டிய மோடி அரசு
- ஒப்பந்த தொழிலாளிக்க ஈபிஎப் பெற்றுத் தந்த மத்திய அமைப்பு
- மின்சார ஊழியர்கள் யார்
- பற்றியெறியும் அனல் மின்நிலையங்கள் வேடிக்கை பார்க்கும் வாரியம்
- என்.டி.பி.எல்-ல் மத்திய அமைப்பு பெற்ற மகத்தான தீர்ப்பு
- கொரோனா தொற்று



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**



**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி



முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# புதிய அரசும் தமிழக மின் ஊழியர்களின் எதிர்பார்ப்புகளும்

தமிழகத்தில் திமுக அரசு பத்தாண்டுகளுக்கு பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. ஆட்சி பொறுப்பு ஏற்றதிலிருந்து இன்று வரை மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்து வருகிறது. இது தொடர வேண்டும் என்பதே அனைவரது ஆவா!

கடந்த 2020 மார்ச் மாதம் 25 முதல் கொடிய கொரானா தொற்று நோய் காரணமாக தேசம் மிகக்கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. தொழிலாளர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்தனர். சிறு,குறு தொழில்கள் நசிந்தன. விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித உதவியும் செய்யாத அரசாக மத்திய பிஜேபி அரசு இருந்தது.

தேசம் பெரும் நெருக்கடியை சந்தித்த பொழுது, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் இதை சரி செய்ய திட்டமிடாமல், மேற்கு வங்கம், கேரளம், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் பணிகளை கவனித்தனர். மக்களை விட, அதிகார போதையை கைப்பற்றிட கணக்குப் போட்டனர். கணக்கு தப்பானது வேறு கதை!

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றதும் இரண்டு தவணைகளில் தலா ரூ.2,000/- வீதம் ரூ.4,000/-ம் உணவு பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனாலும் முறைசாரா தொழிலாளர்கள், ஆட்டோ, வேன், ரிக்ஷா தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு அவர்களுக்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வுகால பணப்பயன்கள் ஓரளவு வழங்கினாலும், ஓய்வூதியம், ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் நிலுவையில் உள்ளன.

தமிழக மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தமிழக அரசு தங்களை முன் களப்பணியாளர்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு மின்வாரியத்தையும் பொதுத்துறையாக பாதுகாக்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**ஏன் முன் களப்பணியாளர்களாக அறிவிக்க வேண்டுகிறோம்?**

கொடிய நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடுவர்களை முன் களப்பணியாளர்கள் என அரசு அறிவித்து. இந்த பணியில் ஈடுபட்டு நோய் தொற்றால் பாதிப்படையும் ஊழியர் குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சமும் சமூக பாதுகாப்பு சலுகைகளையும் ஊக்கத் தொகையும் அவ்வப்போது அரசு அறிவித்து வருகிறது. தகுந்த மருத்துவ சிகிச்சையும் அளித்து வருகிறது. அந்த சலுகை மின்வாரிய பணியாளர்களும் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை.

மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவு பணியாளர்கள், காவல்துறையினர் உள்ளிட்ட அனைவரும் முன்களப் பணியாளர்களே! சந்தேகமில்லை

தொற்று பாதித்த பகுதிகளில், மின் தடை ஏற்படும் பொழுது எந்தவித பாதிப்புக்கு ஆளாகுவோம் எனத் தெரியாமல் அந்த பகுதியில் பணிபுரிபவர்கள் மின் ஊழியர்கள். தொற்று பாதித்த வீடுகளில் உள்ளே சென்று மின் தடையை சரி செய்வதும், கணக்கீடு செய்வதும், கணக்கீடு செய்த இடங்களில் தொற்ற பாதித்தவர்கள் மின் கட்டணம் செலுத்த வரும் பொழுது வசூல் செய்யும் பணிகளில் ஈடுபட்டும் அதன் மூலம் தொற்றுக்கு ஆளானவர்கள், இப்படி பலவிதமான பணிகளில் ஈடுபட்டு, தொற்று பாதித்த இந்த பணியாளர்கள் முன்கள பணியாளர்களே!

மின்சாரம் முறையாக விநியோகிக்க முடியாமல், அல்லது உற்பத்தி முறையாக இல்லாமல் இருந்திருந்தால், நினைத்தும் பார்க்கவே முடியாது. இதை ஆட்சியாளர்கள் கணக்கில் கொள்ள வேண்டும்.

தற்போது தமிழக அரசு முன்களப் பணியாளர்களாக அறிவித்தவர்களுக்கு ரூ. 5000/- ஊக்கத் தொகையாக கொடுத்துள்ளது. அதிலும் கூட மின் ஊழியர்களை கணக்கில் கொள்ளவில்லை என்பது ஊழியர்களிடையே ஒருவித மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. தமிழகஅரசின் ஊரடங்கு உத்திரவை அமலாக்கும் செய்வதற்கு, தடையில்லா மின்சாரம் வழங்கி மக்களை வீட்டினுள் இருக்கச் செய்து நோய் தொற்று சமூக பரவலாக மாறாமல் இருப்பதற்கு பெரிதும் பணியாற்றியவர்கள் மின் ஊழியர்களே என்ற பெருமை எங்களுக்கு உண்டு.

சரண்டர் விடுப்பு பணமாற்றும் சலுகைக்கு 2 ஆண்டுகளுக்கு அனுமதி இல்லை, பஞ்சப்படி முடக்கம் 01.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கு பேச்சுவார்த்தை குழு அமைத்தும் பேச்சுவார்த்தை துவங்கவில்லை, காலிப்பணியிடங்கள் நிரப்பப்

படவில்லை. கணக்கீட்டு பிரிவிலும் களப்பிரிவிலும் பதவி உயர்வு கிடைத்தும் கீழ்மட்ட பணியை செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில் தான் புதிதாக பொறுப்பேற்ற தமிழக திமுக அரசிடம், கீழ்கண்ட கோரிக்கைகளின் மீது உடனடி கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

- ★ மின்துறை பொதுத்துறையாக நீடிக்க வேண்டும்
- ★ தமிழகத்தில் துவங்கப்பட்டு ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் உற்பத்தி திட்டங்களை போர்க்கால அடிப்படையில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ★ மின் வாரியத்தில் கொரானா தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்த பணியாளர்கள் அனைவருக்கும் ரூ.25 லட்சம் வழங்கிடுவதோடு எந்த நிபந்தனையும் இன்றி உடனடியாக வாரிசு வேலை வழங்கிட வேண்டும்.
- ★ மின்வாரிய பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து, அதற்கான சலுகைகளை அளிப்பதோடு, மற்ற துறையினருக்கு வழங்கியதை போல ஊக்கத்தொகை ரூ. 5000/- வழங்க வேண்டும்.
- ★ 27.04.2020-க்கு முன்பு பணமாற்றுச் சலுகைகளுக்காக அனுமதிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பிற்கு தொகை வழங்கிட வேண்டும்.
- ★ 01.12.2019 முதல் மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.
- ★ மின்வாரியத்தில் களப்பணியில் களஉதவியாளர் ITI தொழில்நுட்ப படித்தவர்கள் (2900 பேர்) உதவிப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர் இளநிலை உதவியாளர் ஆகிய ஆரம்பகட்ட பொறுப்புகளை உடனடியாக நிரப்பிட வேண்டும். அவ்வாறு நிரப்பும் பொழுது களஉதவியாளர் பதவிகள் 10,000-க்கும் மேல் காலி உள்ளதை கணக்கில் கொண்டு, மின் வாரியத்தில் அனல், புனல் உற்பத்தி, பொதுக்கட்டுமான வட்டங்களிலும் விநியோக வட்டங்களிலும் பணியாற்றும் ஒப்பந்த ஊழியரை அடையாளங்கண்டு நிரந்தரம் செய்திட வேண்டும்.
- ★ பகுதிநேர பணியாளர்கள் ஒரு சாரார் நிரந்தரப்படுத்தப்பட்டு, இன்று வரை நிரந்தரப்படுத்தாமல் உள்ளவர்களை நிரந்தரப் படுத்த வேண்டும்.

என்ற எதிர்பார்ப்புகள் தமிழக அரசிடம் உள்ளதை, தொழிலாளர்களின் நலனில் அக்கறை உள்ள அரசாக இந்த அரசு இருக்கும், என்று மின் ஊழியர்கள் எதிர்பார்க்கின்றனர்.

-ஆசிரியர்

# பொதுவுடைமை போராளி

# தோழர் மைதிலி சிவராமன்

## அவர்களுக்கு

# செவ்வணக்கம்



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும், தொழிற் சங்க, பெண்கள் இயக்கத் தலைவருமான தோழர் மைதிலி சிராமன் அவர்கள் கொரோனா தொற்றால் பாதிப்படைந்து உயிரிழந்தார் என்ற செய்தி மிகுந்த அதிரிச்சியையும் வேதனையையும் தருகிறது.

அவரது மறைவிற்கு மத்திய அமைப்பு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு அவருக்கு செவ்வஞ்சலியையும் செலுத்துகிறது.

மூன்றாம் உலக நாடுகளின் நலனுக்காக ஐ.நா.வில் தான் வகித்த பதவியை விட்டு இந்தியா வந்து மாதர் சங்கம் உருவாக்கத்தில் முக்கிய பங்கு அவருக்கு இருந்தது.

போராட்டங்களின் நகரமான சென்னையில் 1964 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரையில் தினசரி போராட்டம், தடியடி, துப்பாக்கி சூடு, பொய் வழக்கு, சிறையில் அடைப்பு, பழிவாங்கல், வேலைபறிப்பு என உச்சத்தில் இருந்த போராட்டகளத்தில் தொழிற் சங்கத்திற்கு முழுநேர ஊழியராக மைதிலி அவர்கள் முழுநேர தொழிற் சங்க பணிக்கு வந்து பல தொழிற் சங்கங்களுக்கு தலைமை தாங்கி போராட்டங்களை வழிநடத்தினார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் போராட்ட குணமும் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொண்டு வந்தது மட்டுமல்ல சிறந்த மார்க்சிய வாதியாகவும் தொழிலாளர் பிரச்சனையாக இருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டமாக இருந்தாலும், பெண் விடுதலை, கருத்துச் சுதந்திரம் என்று எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் வர்க்க ரீதியான போராட்டமாக இருந்தாலும், சாதியக் கொடுமையானாலும், மூலைமுடுக்கெல்லாம் சென்று நேரடியாக கள ஆய்வு நடத்தி உண்மைகளை வெளிக் கொண்டு வந்ததில் மைதிலி சிவராமனின் பங்கு அளப்பரியது.

விவசாய கூலிப் பெண்களின் விடுதலையில் தான் நடுத்தர பெண்களின் விடுதலையும் உள்ளது என உணரவைத்தவர்.

கீழ்வெண்மணியின் கோர சம்பவங்கள் நடப்பதற்கு முன்பும், பின்பும் அங்கு நிலவி வந்த அரசியல் மற்றும் வர்க்க பின்னணி நிலவரங்களை முழுமையாக ஆய்வு செய்தார். கீழ்வெண்மணியில் நடந்தது வெறும் கூலி உயர்வுக்கான போராட்டம் அல்ல, அது சாதி கொடுமை, சாதி ஒழிப்பு, நிலப்பிரபுத்துவ சுரண்டல் இவை இரண்டுக்கும் எதிரான போராட்டம் என்பதை வெளிக் கொண்டு வந்தார்.

நியாயக் கூலிச் சட்டம் கொண்டு வந்தபோது இதுபற்றி விவசாயத் தொழிலாளர்களுக்கு விளக்கி அவர்களை உற்சாகம் கொள்ளச் செய்தவர். தலித் மக்களுக்கு டீக்கடைகளை திறந்து விட்டவர் மைதிலி. தஞ்சை மண்ணில் செங்கொடி உயர அவரது பங்கு அளப்பரியது.

அவரின் கலை இலக்கிய ஈடுபாடு நாடகம், மக்கள் எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பின் மூலம் சக்தி கலைக்குழு உருவாக்கினார்.

சாதி, வர்க்கம், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றை எப்போதும் அனைவருக்கும் விளக்க முயல்வார். கருக்கொலை, சிசுக்கொலை தடுக்க போராடியதோடு ஜானகிஅம்மாள் பெயரில் டிரஸ்ட் தோன்ற காரணமானவர் முக்கியமாக பல பணிகளுக்கு நேரடியாக வர முடியாத பெண்களுக்கு ஏற்றார்போல அவர்களின் திறமைக்கேற்ற பணிகளை ஒதுக்கி அவர்களை செய்ய வைத்து மேம்படுத்துவது, மீடியா கமிட்டி, சட்ட உதவி மையம், போலீஸ் ஆலோசனைக் குழு போன்றவற்றில் பங்கேற்க வைத்தன் மூலம் ஏராளமான பெண்களை ஊழியர்களாக உருவாக்கினார்.

தோழர் மைதிலி சிசராமன் சிறந்த அறிவுஜீவியாகவும், போராட்ட போராளியாகவும், சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் ஒரு சிறந்த முன்மாதிரியாக திகழ்ந்தவர். மக்களை அடக்கியாள முற்படும் சட்டங்கள் இயற்றப்படும் இப்போதைய சூழலில் மைதிலி சிவராமன் மறைவு நமக்கெல்லாம் பேரிழப்பு.



# மின்வாரியத்தில் ஒட்டு மொத்த தலைமைப் பொறியாளர்களை இடமாற்றம் செய்வது வளர்ச்சிக்கு உதவாது!

-எஸ். இராஜேந்திரன்

தமிழகத்தில் புதியதாக பதவிஏற்ற திமுக அரசு மக்களின் நலனை கருத்திற்கொண்டு அதிரடியான அறிவிப்புகளையும், திட்டங்களையும் கொண்டு வருவது பாராட்டுக்குரியது. சாமான்ய மக்களும் அரசு நிர்வாகத்தை அணுக முடியும் என்ற எண்ணத்தையும் எதிர்ப்பார்ப்பையும் அதிகரித் துள்ளது.

இந்த கொடிய கொரானா இரண்டாவது அலையில் முதல்வரிலிருந்து அமைச்சர்கள், IAS அதிகாரிகள் முழுவீச்சில் மாவட்டந்தோறும் சென்று மக்களை சந்தித்து நம்பிக்கையூட்டியிருப்பது பாராட்டுக்குரியது. அதனால் தான் பாமரனிலிருந்து தொழிலதிபர்கள் வரை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நிதி உதவி அளித்து வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் புதியதாக பொறுப் பேற்ற திமுக அரசு IAS, IPS அதிகாரிகளை இடம் மாற்றம் செய்துள்ளது. நடைமுறையில் உள்ள ஒன்று.

ஆனால் அரசின் மிக முக்கியமான சேவைத்துறையான மின்துறையில் தலைமைப் பொறியாளர்கள் அனைவரையும் இதுவரை இல்லாத வகையில் இடமாற்றம் செய்திருப்பது மின்வாரிய கட்டமைப்பு சிதைபடும் என்பதை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். இதில் ஒரு சில பொறியாளர்கள் செயல்படாமல் இருந்திருக்கலாம். அத்தகையவர்களைஅடையாளங் கண்டு மாறுதல் செய்வது பொருத்தமாக இருக்கும்.

மின்வாரியத்தில் பொதுவாக மூன்றாண்டு களுக்கு ஒரு முறை காலநிலை மாறுதலில் அனைவரையும் இடம் மாறுதல் செய்து கட்டாயமாக அனைத்து பகுதிகளிலும் பணியாற்ற வேண்டிய சூழலை உருவாக்க வேண்டும். கடந்த காலங்களில் மின் விநியோகம், மின் உற்பத்தி, மின்பாதைகள் அமைத்தல், துணை மின் நிலையங்கள் அமைத்தல், கருவிகாத்தல், மின் அளவி ஆய்வுக்கூடம், மற்றும் சிறப்பு பராமரிப்பு பிரிவில் பணி புரிந்தாலே அவர்களுக்கு செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் நாளடைவில் நிர்வாக காரணங்களுக்காக பின்பற்ற இயலவில்லை.

மின்வாரியத்தின் மின் உற்பத்தியில் சிறப்பாக செயல்படும் பொறியாளரை மின் விநியோக வட்டத்திற்கு மாற்றினாலே அல்லது மின் விநியோக வட்டத்தில் சிறப்பாக நேர்மையாக செயல்படும் பொறியாளரை மின் உற்பத்தி திட்டத்திற்கு இடம் மாற்றம் செய்தால் இரண்டு இடங்களிலும் புரிந்து கொண்டு களம் இறங்க இவர்களது செயல்பாடுகள் காலதாமதம் ஆகும். இதனால் மின் உற்பத்தி பணிகள் பாதிக்கும். மின் விநியோக பகுதிகளில் அரசின் திட்டங்களை அமலாக்குவதில் தேவையற்ற காலதாமதமும் ஏற்படும்.

அனைத்து பொறியாளர்களும் மின்வாரி யத்தில் எல்லா இடங்களிலும் பணியாற்ற தகுதி படைத்தவர்களே! ஆனாலும் மருத்துவத்துறை போல சில நோய்க்கான சிறப்பு மருத்துவர் போல மின் துறையிலும் பொறியாளர்கள் சில பிரிவுகளில் சிறந்தவர்களே. அப்படிப்பட்ட பொறியாளர்களை தேர்வு செய்து பொருத்தமான இடத்தில் பணி அமர்த்துவதே நிர்வாகத்தை சிறப்பாக நடத்த உதவும் என்பதை மின்வாரிய நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

தமிழக அரசும், மின்வாரிய நிர்வாகமும் சிறந்த நிர்வாகமாக செயல்பட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மின் ஊழியர்கள் எதிர்பார்க் கிறார்கள்.



# அகற்றப்பட வேண்டிய மோடி அரசு !

- தி.ஜெயசங்கர்

கொரானா இரண்டாவது அலையின் தாக்கம் இன்று இந்தியாவை ஆட்டி படைத்து வருகின்றது. நாளொன்றுக்கு 3.5 லட்சம் தொற்றுகள் 4000 இறப்புகள் என்று அதன் வேகம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. அதனால் 08.05.2021 முதல் 24.05.2001 வரை பொது முடக்கத்தை அறிவித்தது அரசு. புதிய சுகாதார கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டதா காரணத்தால் கடந்த 30 ஆண்டுகளாக மருத்துவமும், சுகாதாரமும் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மக்கள் கொரானாவை எதிர்கொள்ள முடியாமல் பாதித்து இறந்து போகின்றனர்.

உலக நாடுகள் எல்லாம் இந்தியா கொரானா நோய் தொற்றில் முதலிடத்தில் இருப்பதை கண்டும், வளர்ச்சியின் நாயகன் என்று ஊடகத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட மோடியின் குஜராத்தில் மக்கள் கொத்து கொத்தாக சாவதை பார்த்து ஆலோசனைகள் வழங்கி வருகிறார். இந்த பிரச்சனைக்கு மக்கள் தான் காரணம் என்று ஊடகங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து மோடியின் முகத்தை மறைக்க பார்க்கின்றது. லான் சென்ட் என்ற அறிவியல் ஆய்வு பத்திரிக்கையோ இதற்கு முழுமுதல் காரணம் மோடி தான் என்று விமர்சனம் செய்தது. இரண்டாவது அலை தொடங்கும் போதே உலக சுகாதார மையமும், மருத்துவ அறிஞர்களும் சொன்ன எச்சரிக்கையை மோடி அரசு புறக்கணித்தது.

கொரானா தொற்று பரவுவதை அறிந்தும் உத்திரபிரதேசத்தில் உள்ளாட்சி மன்ற தேர்தலை நடத்தியது, சமூக செயல்பாட்டாளர்களின் எதிர்ப்பை மீறியும் வாரணாசியில் கும்ப மேளாவை நடத்தியது, மேற்கு வங்கம் அஸ்லாம் மாநிலங்களில் சட்டமன்ற தேர்தல் நடத்தியது போன்றவை இன்று இந்தியா கொரானாவின் Hot Spot ஆக மாற்றியதற்கான காரணங்கள். கொரானா நோய் தொற்றின் பாதிப்புகளை உணராமல் திசை திருப்ப IPL கிரிக்கெட் போட்டிகளை நடத்த அனுமதித்தது மோடி அரசின் மாபெரும் தவறுகள். இன்று மக்கள் படும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் மோடியே முழு பொறுப்பானவர் என்று உலகம் முழுவதுமுள்ள ஊடகங்களும், பத்திரிக்கைகளும் தொடர்ந்து எழுதி வருகின்றன. எதற்கும் பதில் அளிக்காமல் பாபா ராம்தேவ் யோகா சாமியாரின் மருந்தை Promote செய்து கொண்டுள்ளார்.

முதல் அலையின் போதே ஆக்ஸிஜன் அவசியத்தை உணர்ந்து கொண்ட நாம், ஆக்ஸிஜன் தட்டுப்பாடு வரும் என்று தெரிந்தும் அதற்கான முன்னேற்பாடுகளை செய்ய தவறியது மோடி அரசு. தடுப்பூசி உற்பத்தியிலும், ஆக்ஸிஜன் உற்பத்தியிலும் பொதுத்துறை நிறுவனங்களை ஈடுபடுத்தாமல் தனியார் கார்ப்பரேட் கொள்ளைக்கு வழி ஏற்படுத்தியதன் மூலம் இந்திய மக்களை வஞ்சித்தது மோடி அரசு. தடுப்பூசி விநியோகத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதித்து, தடுப்பூசிக்கு விலை நிர்ணயம் செய்து கொடுத்தது மோடி அரசு. பெருந்தொற்று ஏற்பட்ட போதெல்லாம் தடுப்பூசிகளை இலவசமாக இந்திய அரசு அளித்து தனது கடமையை செய்து வந்ததை மாற்றி அதை சந்தையாக மாற்றி கொள்ளை அடிக்க

வைத்தவர் தான் மோடி.

முதல் அலையின் அனுபவத்தில் மாநில அரசுகள் இரண்டாவது அலையிலிருந்து மக்களை காக்க தயாராகி வந்த நிலையில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய GST நிதியை அளிக்காமல் வைத்திருக்கும் மோடியின் செயல் மக்களை வஞ்சிக்கும் செயல் அல்லவா?

கொரோனா நோய் தொற்று வருவதை தடுக்கும் வகையிலான தடுப்பூசி தயாரிக்கும் தனியார் நிறுவனங்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்தால் அனைவருக்கும் மருந்து கிடைக்கும். ஆனால் அதை செய்யாமல் பன்னாட்டு முதலாளிகள் லாபம் கொழிக்க இவர் பக்கபலமாக செயல்படுவது வாக்களித்த மக்களுக்கு எதிரான செயல் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இது மட்டுமல்ல ஏகாதிபத்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் தடுப்பூசியில் செய்து வரும் ஆதிக்கத்திற்கு மோடி அரசு அடிபணிந்து இந்தியாவின் தேவையை கணக்கில் கொள்ள வில்லை. இதன் விளைவாக அமெரிக்கா, கனடா, போன்ற நாடுகள் மக்கள் தொகையை விட இரு மடங்கு தடுப்பூசிகளை சேமித்து வைத்துக் கொண்டனர். நாமோ தடுப்பூசி இறக்குமதிக்காக மேலை நாடுகளை எதிர்பார்த்து காத்துக் கொண்டுள்ளோம். ஒரு பொருளின் விலையை தீர்மானிப்பதில் தேவைக்கும் (Demand) அளிப்புக்கும் (Supply) இடையிலான பற்றாக் குறையே விலையை தீர்மானிக்கின்றது என்பது முதலாளித்துவ பொருளாதாரத்தின் அரிச்சுவடி. தடுப்பூசியின் தேவை அதிகரிக் கின்றது. ஆனால் சந்தையில் தட்டுப்பாடு தீவிரமடைகின்றது. அரசின் கைகளில் இருப்பு இல்லை. கார்ப்பரேட் மருத்துவமனைகளில் தடுப்பூசி இருப்பு குவிகின்றது. இப்படியாக இரட்டிப்பு விலை நம்மீது திணிக்கப்படுகின்றது.

இந்த தடுப்பூசி உற்பத்தியில் சுமார் 50 சதம் கோவிஷீடும், 50 சதம் கோவாக்சினும் மக்கள் போட்டுக் கொண்டால் கோவிஷீடு தயாரிப்பு நிறுவனத்திற்கு 35,350 கோடிகளும், கோவாக்சின் தயாரிப்பு நிறுவனத்திற்கு 75,750 கோடிகளும் இலாபமாக கிடைக்கும். இது மேலும் மேலும் கொரோனா அலையும், பயமும் இருக்கும் வரை கூடுமே தவிர குறையப்போவதில்லை. ஏனென்றால் தடுப்பூசி தயாரிக்கும் காப்புரிமை (Patent right) அரசு நிறுவனங்களிடம் இல்லை. மோடி அரசின் பொருளாதார கொள்கையானது ஒட்டு மொத்த பொதுத்துறைகளையே மூடிவிடுவது என்பதாக இருப்பதால் அரசுக்கு சொந்தமான எண்ணற்ற மருந்து / தடுப்பூசி உற்பத்தி நிறுவனங்களும், ஆராய்ச்சி மையங்களும் செயலற்று நிற்கின்றன.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் நிறுவனம் 91 சதம் பாதுகாப்பானது அந்த நிறுவனம் டாக்டர் ரெட்டி நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் தடுப்பூசி உற்பத்தியில் ஈடுபட உள்ளது. அதே போல அமெரிக்காவின் மாடர்னா, பைசர் நிறுவனங்களும் உற்பத்தியில் ஈடுபட வரிசையில் நிற்கின்றது. தடுப்பூசியின் காப்புரிமையை யாருக்கும் கொடுக்க முடியாது என்று உலக கொடை வள்ளல் என்று போற்றப்படும் பில்கேட்ஸ் முகத்தில் அறைந்தாற் போல கூறியுள்ளார். உலகமே அழிந்தாலும் கார்ப்பரேட்டுகள் தங்களது இலாபத்தை விட்டு கொடுக்க மாட்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

மறுபுறம் செங்கல்பட்டில் இருக்கும் ஒருங்கிணைந்த தடுப்பூசி திட்டத்தின் அடிப்படையிலான தடுப்பூசிகள் தயாரிக்கும் Hindustan Bio Limited (HBL) அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கொரோனா தடுப்பூசிகள் தயாரிக்க முடியும். ஆனால் திட்டமிட்டு இந்த பொதுத்துறை நிறுவனத்தில் மருந்து உற்பத்தி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை மோடி அரசு. அதே போல ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் கொத்து கொத்தாக மடிவதை கண்ட பிறகும் ஆக்ஸிஜனை தேவைக்கும் அதிகமாக இரும்பு உருக்காலை, பெட்ரோலியம் சுத்திகரிப்பு நிலையங்கள், BHEL SAIL கீழ் இயங்கும் நிறுவனங்கள் போன்ற கனரக தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்ய முடியும். பெருந்தொற்று பேரிடரை சமாளிக்க முடியும். இவை தயாரிக்கும் ஆக்ஸிஜன் 99.7 சதம் தரமாகவும் உள்ளது. இதை செய்யாமல் டாட்டா, ஜின்டால், வேதாந்தா நிறுவனங்கள் உற்பத்தி

செய்ய அனுமதியளிக்கின்றது. பெரிய மருத்து வமனைகள் 32 கோடி செலவு செய்தால் தனக்கு தேவையான ஆக்ஸிஜனை தானே தயாரித்து கொள்ளலாம். மேற்கண்ட வாய்ப்புகளை எல்லாம் நீதி மன்றமும் பரிசீலிக்கவில்லை. மத்திய மாநில அரசுகளும் அனுமதிக்கவில்லை. அவர்களது நோக்கம் ஒன்று தான் ஆக்ஸிஜன் பற்றாக்குறையை காட்டி பணம் சம்பாதிப்பது தான் பல லட்சம் கோடிகள் கடனில் இருந்த அனில் அம்பானி கொரோனாவை வைத்து கடனையும் அடைத்து பல லட்சம் கோடிகள் இலாபம் ஈட்டியுள்ளது அம்பானியின் நிறுவனம். ஆக்ஸிஜன் விநியோகத்திலும் முன்னனி நிறுவனமாகி விட்டது இன்று.

பொதுத்துறைகளை ஒழித்துக்கட்டி சமூக நலனை வேரோடு சாய்ப்பது தான் மோடி ஆட்சியின் நோக்கம் என்பதை மக்களும், மத்திய, மாநில பொதுத்துறை ஊழியர்கள் புரிந்து கொண்டு ஒற்றை தலைமையில் ஒன்று சேர வேண்டிய நேரமிது. கொரானா இரண்டாவது அலையில் இறந்தவர்கள் அரசின் மெத்தன போக்கால், பிற்போக்கான கொள்கையால் பல ஆயிரம் பேர் இறந்தனர் என்பதை ஊருக்கு உறக்க சொல்லும் நேரமிது. அறிவார்ந்த மக்களும், பொதுத்துறை ஊழியர்களும் கைகோர்த்து மத்திய மோடி அரசை வீழ்த்த இன்றே ஒன்றிணையவும், வியூகங்கள் அமைக்கவும், மக்கள் திரளை அணி திரட்டவும் தயாராக வேண்டும். கார்ப்பரேட்டுகளின் பினாபி அரசாக உள்ள மோடி அரசை அகற்ற பொதுத்துறைகளை காப்பாற்ற ஒன்றுபடுவோம்.

மாற்றங்களை நோக்கி வேலை செய்வோம்.....

மாற்றத்திற்கான ஆண்டு 2021.



## நெல்லை மண்டலத்தில்
## கொடிய கொரானா நோயினால் உயிர் நீத்தவர்களுக்கு
## மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் அஞ்சலி !

நெல்லை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகம் முன்பு, நெல்லை, தூத்துக்குடி, குமரி, விருதுநகர் ஆகிய வட்டங்களில் கொடிய கொரானா தொற்று நோயால் உயில் நீத்த பணியாளர்களுக்கு அவர்களின் படத்தை வைத்து, மெழுகுவர்த்தி ஏந்தி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தி நெகிழ வைத்தனர். உயிர் நீத்த பணியாளர்களின் குடும்பத்திற்கு தைரியத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்திய நிகழ்ச்சி. சங்க வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் கலந்து கொண்டது வர்க்க ஒற்றுமையை பறைசாற்றியது. மாநிலம் முழுவதும் கிளைகள் தோறும் நடத்த வேண்டிய நிகழ்ச்சிக்கு அடித்தளம் அமைத்த நெல்லை மண்டல தோழர்களுக்கும், குறிப்பாக தோழர்கள் வண்ணமுத்து, பீர்முகமது ஷா, உள்ளிட்ட தலைவர்களுக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பின் நன்றிகளும் பாராட்டுகளும்.

# மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு (EPF) பெற்றுத்தந்த மத்திய அமைப்பு




**கே. விஜயன்**
மத்திய அமைப்பின் முன்னாற் தலைவர்

தமிழ்நாடு மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் பயன்படுத்தும்பொழுது மின் வாரியம் தொழிலாளர் சட்டங்களையோ சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளையோ எதுவும் பின்பற்றுவதில்லை. ஒப்பந்த தொழிலாளர்கள் மின்வாரியத்தில் இல்லவே இல்லையென்று சாதித்தது. ஒரு அரசு நிறுவனம் இதர தனியார் நிறுவனங்களுக்கு மாதிரி நிறுவனமாக இருக்க வேண்டிய நிறுவனம் அதற்கு எதிராக செயல்பட்டது தான் விநோதம். ஆட்சியில் உள்ளவர்களின் ஆதரவோடும் தான் மின்வாரியம் செயல்பட்டு வந்தது.

இதை எதிர்த்து மின்வாரியத்தில் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து பல்வேறு போரட்டங்களையும் சட்டரீதியான நடவடிக்கை களையும் எடுத்தது நீதிமன்றத்திலும் போராடியது. ஒப்பந்த தொழிலாளர் இல்லவே இல்லை என்று சாதித்த மின்வாரியத்தில் அனல் மின்நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று மத்திய அமைப்பு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பினை பெற்று தமிழக அரசை அரசாணை வெளியிட வைத்தது. அரசு ஆணை எண் G.O 950/ 8.8.1990 ஆகும்.

அதே காலத்தில் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல் படி அமைக்கப்பட்ட காலித் கமிட்டி மூலம் ஒப்பந்த தொழிலாளர்களை அடையாளம் காட்டி நிரந்தரம் பெற்றுத்தந்த வரலாற்று சாதனை தமிழ்நாடு மின்வாரியத்தில் நடந்தது என்றால் அதற்கு சிஐடியு அமைப்பே காரணமாகும். அதில் ஐஎன்டியுசி சம்மேளன சங்கங்கள் இருந்தாலும் நெம்புகோலாக மத்திய அமைப்பே இருந்தது. விநியோகப்பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்கள் பெரும்பான்மையாகவும் அனல் மின்நிலையங்களில் குறைந்த எண்ணிக்கையிலும் நிரந்தரம் பெற்றது ஒப்பந்த தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கை ஒளி ஏற்பட்டது.

காலித் கமிட்டி நிரந்தரம் மற்றும் அனல் மின்நிலையங்களில் நிரந்தரம் இவை இரண்டும் மின்வாரியத்தில் நடந்தபோது காலித் கமிட்டி பட்டியலில் இடம் பெறாத தொழிலாளர்கள் விநியோகப்பகுதிகளில் பணியாற்றுவோர் 8.8.98 இல் அடையாளம் காணப்பட்டு மின்வாரியத்தின் கணக்கில் வருகின்றவர்கள் 1999 ஆம் ஆண்டில் நிரந்தரம் செய்யாமல் விடப்பட்டனர். அவர்களுக்கு மின்வாரியம் கருணைத்தொகை தீபாவளிப் பண்டிகையின் பொழுது அளிக்குமே அதைத்தவிர வேறொன்றுமில்லை. மத்திய அமைப்பு சும்மா இருக்கவில்லை. ஒப்பந்த தொழிலாளர்கள் அடையாளம் காணப்பட்டவர்கள் அரசாணை 950 அடிப்படையில் ஒப்பந்தமுறை தடைசெய்யப்பட்ட

பகுதிகளில் பணியாற்றி வருபவர்கள் தொழிலாளி என்ற வரையறுக்குள் வருகின்றனர். அவர்களுக்கு மின்வாரியத்தின் பொதுபப்பணித்துறை ரேட் அடிப்படையில் ஊதியம் வழங்கிட மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தை மத்திய அமைப்பு அணுகியது. சென்னை உயர்நீதிமன்றம் கோரிக்கையை ஏற்கவில்லை.

அடுத்த நடவடிக்கையாக சமூக பாதுகாப்பு நடவடிக்கையான வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்திட முடிவு செய்தது. மின்வாரியத்தில் மத்திய அமைப்பு சமர்ப்பித்த ஒப்பந்த தொழிலாளர்களின் பட்டியலின் அடிப்படையில் தினம்தோறும் அத்தொழிலாளிக்கு பொதுப்பணித்துறை ரேட் தினக்கூலி 69 அடிப்படையில் பிஎப் 12 சதவீதம் பிடித்தம் செய்திட அனைத்து பிஎப் மண்டல அலுவலகங்களுக்கு உட்பட்ட மின்விநியோக திட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழி லாளர்களுக்கு மின்வாரியம் பிஎப் பிடித்தம் செய்ய மனுச்செய்யமுடிவு செய்தது.

ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றிய 01.04.1978 முதல் 7.2006 வரை பிடித்தம் செய்யவில்லை என்றும் அதற்கான தொழிலாளர் செலுத்தும் தொகை தவிர்த்து நிர்வாகம் செலுத்த வேண்டியதை வட்டி மற்றும் தண்டத்தொகையுடன் ஓய்வுதியம் மற்றும் EDLI உட்பட உள்ள தொகைகளை கணக்கிட்டு மனுவினை அளித்தது.முதலில் சென்னை மண்டலத்தில் பிஎப் தொகை செலுத்திட வருங்கால வைப்புநிதி சட்டம் EPF & MP 1952 Act பிரிவு 7A அடிப்படையில் விசாரணை நடைபெற்றது. மின்வாரிய நிர்வாகம் ஒப்பந்த தொழிலாளர் இருப்பதை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல தங்களது நிறுவனம் பிஎப் திட்டத்திலிருந்து முற்றிலுமாக விலக்கு பெற்றுவிட்டதால் வருங்கால வைப்பு நிதி சட்டம் அடிப்படையில் விசாணை நடத்த முடியாது என்று வாதிட்டதை மத்திய அமைப்பு ஏற்கவில்லை. மத்திய அமைப்பு கோரிக்கையை ஏற்ற பிஎப் மண்டல அதிகாரி தொழிலாளர்களுக்கான பிஎப் தொகைகளை செலுத்திட உத்தரவிட்டார். அதை எதிர்த்து மின்வாரியம் சென்னை உயர்நீதிமன்றம் சென்றது. இதே காலத்தில் சேலம் பிஎப் மண்டல அதிகாரி முன் மேட்டூர் சேலம் தருமபுரி சேலம் பொது கட்டுமானம் ஆகிய திட்டங்களின் சார்பாக மனு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடந்து வந்தது.மத்திய அமைப்பு மற்றும் உள்ள மின்வாரிய தொழிற்சங்கங்கள் அளித்த பட்டியலை பிஎப் விசாரணை அதிகாரி மின் விநியோக திட்டங்களுக்கு அளித்தார். அந்தப்பட்டியலை பெற்ற மின்வாரியம் பட்டியலில் உள்ள எந்த தொழிலாளியும் வேலை செய்யவில்லை என்று தெரிவித்து விட்டதோடு நிற்காமல் சங்கங்கள் அளித்த பட்டியலில் உள்ளவர்கள் சிலர் இல்லை என்று தெரிவித்தது என்பது எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று சொன்னதாயிற்று.

சங்கங்கள் அளித்த பட்டியலில் உள்ள தொழிலாளர்கள் கருணைத் தொகை பெற்றுவந்தவர்கள் ஆவார்கள். இதற்கிடையில் மின்வாரிய நிர்வாகம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் **WP 43867/ 2006** மற்றும் **WP 43868 / 2008** வழக்கில் மின்வாரியம் மனுச்செய்தது தள்ளுபடி ஆனது. மீண்டும் மேல் முறையீடு செய்தாலும் மின்வாரியம் வெற்றி பெறமுடியவில்லை.

சேலம் பிஎப் மண்டல விசாரணை அதிகாரி ஆனவர் மின்திட்டங்களுக்கு சங்கங்கள் சமர்பித்த ஒப்பந்ததொழிலாளர்களின் பட்டியலை அளித்தது. மின்வாரிய திட்ட நிர்வாகம் ஏற்கவில்லை. மண்டல் பிஎப் அதிகாரி பிஎப் தொகையை திட்ட நிர்வாகங்கள் செலுத்திட உத்தரவு போட்டது. மின்வாரியம் உச்சநீதிமன்றம் சென்று தொகை செலுத்த நிர்ப்பந்திக்க வேண்டாம் என்றும் ஒரு தீர்ப்பினை 12.11.2007 இல் பெற்றது.உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த வழக்கு சிவில் வழக்காக 2009 இல் மாற்றப்பட்டு 20.07.2017 இல் தீர்ப்பளித்தது.தமிழ்நாடு மின்வாரியம் மேல்முறையீடாக தொடுத்த வழக்கில் எந்தவித சட்டத்தின் எந்த அடிப்படையுமில்லை.

ஆகவே மின்வாரியத்தின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு 7A விசாரணையில் விசாரணை அதிகாரி முடிவு செய்த தொகையினை மின்வாரியம் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு செலுத்திட வேண்டும் என உத்தரவிட்டது. மின்வாரியம் இதோடு விடவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் மீண்டும் மனுச்செய்தது. இப்பொழுது நிர்வாகத்தின் கோரிக்கை ஆனது மாறியது. சங்கங்கள் தாக்கல்

செய்த தொகையானது எந்தவித அடிப்படையும் இல்லாதது. அதிகமான தொகையை கேட்டு பிஎப் மண்டல அதிகாரி முன்னர் வழக்காக போட்டதை அப்படியே அதிகாரி ஏற்றுக்கொண்டு உத்தரவு போட்டது தவறு .ஆகவே தொகையை குறைக்க 7B விசாரணை மீண்டும் துவக்கிட வேண்டும் என்று அதற்கான அதிகாரம் படைத்த பிஎப் அலுவலகத்தில் மனுச்செய்தது. அம் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் அதே கோரிக்கையுடன் மனுவினை தாக்கல் செய்தது. சென்னை உயர்நீதிமன்றம் EPF&MP Act 1952ன் 7B விசாரணை செய்ய அனுமதித்தது. சேலம் பிஎப் அலுவலகத்தில் உதவி பிஎப் ஆணையாளர் முன்னிலையில் 12.02.2018 இல் துவங்கிய விசாரணை CB/SLM/96061 வழக்கில் 19.02.21 இல் தீர்வம் அளிக்கப்பட்டது. மத்திய அமைப்பு தரப்பில் முன்வைத்த வாதங்களில் ஒன்று 7B விசாணை கூடாது என்பதாகும். நிர்வாகத்தரப்பு விவரங்கள் அனைத்தையும் ஆணையாளர் பரிசீலித்துள்ளார்.அதில் ஒன்று 10.08.2007 முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் அடி;படையில் பிஎப் வேண்டுமென்று கோரும் தொழிலாளர்கள் பலரும் நிரந்தரமாகி விட்டனர். அந்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் பிஎப் வழக்கிலிருந்து விடுவித்துக் கொள்வதாக சங்கங்கள் ஒப்புக்கொண்டது. இந்த ஒப்பந்தத்தில் சிஐடியு கையெழுத்திடவில்லை என்று நிர்வாகம் முன்வைத்த வாதத்தை ஆணையாளர் ஏற்கவில்லை. பிஎப் சட்டத்தின் விதிகளை முத்தரப்பு ஒப்பந்தம் கட்டுபடுத்தாது என்று நிர்வாகத்தரப்பில் கூறிய வாதங்களை நிராகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல் ஒரு நிர்வாகமானது ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கூலியாக எதுவும் அளிக்கவில்லை என்றும் M புக் மூலம் தான் கூலி ; என்பது நிர்ணயிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் அதையே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வாதிட்டது ஏற்புடையது இல்லையென்றாலும் தொழிலாளர் தரப்பில் அதற்கான ஆதாரம் எதுவும் அளிக்கப்படவில்லை என்றும் நிர்வாகமானது ஒப்பந்த தொழிலாளர் சட்டம் 1975 அடிப்படையில் பதிவேடுகளை பராமரிக்கப்படுவது உள்ளதா என்ற கேள்விக்கு மின்வாரியம் எந்தப்பதிலையும் அளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று வருங்கால வைப்புநிதி சட்டப்படி பின்பற்றவேண்டிய எந்த விதியையும் பின்பற்றவில்லை என்றும் தமிழ்நாடு மின்வாரிய மேனுவல் வால்யூம் 1 சேப்டர் VI part B(ii) and (iii) படி நிர்வாகம் பராமரிக்கவேண்டிய பதிவேடுகளை அலுவலகத்தில் சென்று சோதனை யிட்டபோதும் கிடைக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியு;ளளார். ஒரு நிர்வாகம் வேண்டுமென்றே ஒப்பந்த தொழிலாளர்கள் பணியாற்றுவதை பதிவு செய்யாமல் விட்டுள்ளது என்றும் முடிவுக்கு வரவேண்டிஉள்ளது.

எனவே நிர்வாகம் M புக் மூலம் அளித்த விவரங்கள் மூலம் கணக்கிட்டு சேலம் மின்திட்டத்திற்கு மட்டும் ஒரு கோடியே 2 லட்சத்து அம்பதாயிரத்து 366 ரூபாய் அளிக்க வேண்டும் என உத்தரவளித்துள்ளார். இதே போன்று தருமபுரி மற்றும் மேட்டூர் மின்திட்டங்களுக்கும் உத்தர வளித்துள்ளார். இந்த வழக்கில் பல்வேறு உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும் உயர்நீதிமன்றத் தீர்ப்புகளையும் ஆதாரத்திற்கு அளித்து நிர்வாகத்தின் நியாமற்ற போக்கினை சுட்டிக் காட்டியுள்ளார். இத்தீர்வத்தை வழங்கியவர் உதவி வருங்கால வைப்புநிதி ஆணையாளர் திரு.நவீன் இம்மானு வேல் ஆவார். இவ்வழக்கில் சேலம் நாமக்கல் மேட்டூர் திட்ட நிர்வாகிகளுடன் மத்திய அமைப்பு நிர்வாகிகள் மற்றும் சேலம் சிஐடியு மாவட்ட நிர்வாகி K.P. சுரேஷ்குமார் கலந்து கொண்டனர்.







# மின்சார ஊழியர்கள் யார்?

மின் ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கை என்பது முன்களப்பணியாளர்கள் என்று அறிவிப்பது அல்ல அங்கீகரிப்பது என்பதாகும். இந்த கோரிக்கை தொடர்ந்து ஏற்கப்படாமல் உள்ளது. இதனால் தன்னுயிரை பணயம் வைத்து வேலை செய்து வரும் ஊழியர்களின் அர்பணிப்பு, தியாகம் கவனிக்கப்படாமல் கடந்து போகின்றது. மின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால் Esma சட்டம் பாயும் என்று சொல்லும் அரசுகள் முன்கள பணியாளர்கள் என்று அறிவிக்க தயக்கம் காட்டி வருவது விந்தையாக உள்ளது. மின் ஊழியர்களின் பணியை தியாகத்தை ஊருக்கு வெளிச்சம் போட்டு காட்டுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

விடியற்காலை மணி 3 மணி மின்தடை நீக்கப் பணியின் தொலைபேசி அழைப்பு அலற மறுமுனையில் EB ஆபிஸ்சுங்களா.. ஆமாம் என்று சொல்ல ... ராயப்பேட்டைல சுத்தமா கரண்ட இல்லீங்க, சின்ன கை குழந்தைங்க, வயசான இரண்டு பேர் முடியாம கரண்ட இல்லாம சிரமமாக உள்ளது என்று சொல்ல மின் ஊழியர்கள் மின் தடையை நீக்க ராயப்பேட்டை சென்றனர். அங்கு HG. Fuse போட மேலே ஏறிய கம்பியாளர் மின்சாரம் தாக்கி கீழே விழுந்தார். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் மறுநாள் காலை உயிரிழந்தார்.

அது ஒரு மழைக்காலம், கடும் புயலால் காவிரி டெல்டா பகுதிகள் சூறைக்காற்றால் சேதமடைந்தது. தென்னை, வாழை, மரங்கள் சாய்ந்தது மட்டுமல்லாமல் மின் கம்பங்களும் ஆயிரக்கணக்கில் சாய்ந்தன. மின் தடைகளை நீக்கவும், சாய்ந்த கம்பங்களை நிறுத்தவும், உடைந்த கம்பங்களுக்கு பதிலாக புதிய மின் கம்பங்களை பொருத்தும் அவசர காலப்பணியில் பலர் கம்பத்தின் மேல் இருந்து விழுந்து இறந்தனர். பலர் கம்பங்களை தோளில் சுமந்து சுமைதாங்காமல் விழுந்த கம்பத்தின் கீழே கால் மாட்டி கால் உடைந்தவர் பலர், மண்டை உடைந்தவர் பலர்..

ஒரு நாள் காலை 6.00 மணி சென்னை வடக்கு வட்டம் தண்டையார் பேட்டை பகுதியில் கரண்ட் இல்லை என்று போன் வர மின் மின் தடையை நீக்க கம்பம் ஏறிய கம்பியாளர் Cut Point Pole -ல் ஒரு முனையில் மின்சாரம் உள்ளதை அறியாமல் கை வைக்க மின்சாரம் தாக்கி கீழே விழுந்தார். மண்டையில் அடிபட்டு அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் 3 மாதங்கள் சிகிக்சை பெற்றார். அவருடைய இரண்டு கைகள் துண்டிக்கப்பட்டது. மண்டையில் கடுமையான காயத்துடன் இன்று அவர் நடை பிணமாக உள்ளார். அவரால் தன்னிச்சையாக எதுவும் செய்ய முடியாது. அவரின் குடும்பத்தின் வறுமை வார்த்தைகளால் சொல்லி மாளாது.

மார்ச் 2021 முதல் வாரம் கோவை பகுதியில் கேங்மேனாக பணியேற்ற 10வது நாளில் மின் கம்பத்தில் ஏறி வேலை செய்த போது மின்சாரம் தாக்கி சாய் சந்துரு என்ற 24 வயது இளைஞர் மரணமடைந்தார்.

இது போன்ற எண்ணற்ற விபத்துகளால் மரணம், கை, கால்கள் முறிப்பு போன்வற்றை சந்தித்து வருபவர்கள் தான் மின் ஊழியர்கள். மழை, புயல் காலமாக இருந்தாலும், கடும் கோடை காலமாக இருந்தாலும் மின்தடைகளை சரிசெய்து

மக்களுக்கு தடையில்லாத மின்சாரத்தை வழங்கி வருபவர்கள் மின்சார ஊழியர்கள். பண்டிகை காலங்களில், மழைக்காலங்களில், கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களில் மக்கள் அனைவரும் வீட்டில் இருக்க மின் ஊழியர்கள் தடையில்லாத மின்சாரத்தை தரும் பணியில் ஈடுபட்டு வருவார்கள். இரவிலும் மின்சாரம் தடைபடாமல் இருக்க ஓய்வில்லாமல் பணி செய்வான் மின்சார ஊழியன்.

21-ம் நூற்றாண்டில் 20 ஆண்டுகளை கடந்து விட்டோம். செவ்வாய் கிரகத்தில் மனிதனை குடியேற்ற திட்டமிட்டு வருகின்றோம். ஓட்டுனர் இல்லாத கார்,பஸ், போன்றவற்றை உருவாக்கி வருகின்றோம். கடலுக்கு அடியில் ஓட்டல், ஆறுகளுக்கு கீழே இரயில் பாதை என்ற விஞ்ஞானம் பாய்சல் வேகத்தில் முன்னேறி வருகின்றது. ஆனால் மின்வாரியத்தில் கம்பம் ஏறவும், டவர் லைன் கம்பம் ஏறவும் ஆதிமனிதன் கரங்களை பயன்படுத்தியதை போலவே இன்றும் பயன்படுத்தி வருகின்றோம். ஏற்படுகின்ற விபத்துகளில் சரிபாதி கம்பத்தில் இருந்து விழுந்து இறப்பது தான் என்று புள்ளி விவரங்கள் சொல்கின்றன. பல ஆயிரம் கோடிகள் லாபத்தை ஈட்டும் மின்வாரியம் சில லட்சங்கள் செலவு செய்து புதிய தொழில் நுட்பங்களை புகுத்தினால் எண்ணற்ற விபத்துகளை தவிர்க்க முடியும். இப்படிப்பட்ட ஆபத்துக்களும், கண் முன்னே மரணம் எப்போதும் காத்து கிடக்க வேலை செய்யும் மின்ஊழியர்களைமுன்களப்பணியாளர்கள் என்று வாரியமும், அரசும் அறிவிக்காமல் இருப்பது மின் ஊழியர்களின் உழைப்பை, தியாகத்தை அங்கீகரிக்க மறுப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

மருத்துவர்கள், துாய்மை பணியாளர்கள், காவல்துறை பணியாளர்களின் உழைப்பை, தியாகத்தை நாங்கள் ஒரு போதும் குறைத்து மதிப்பிடவில்லை. அவர்கள் முன்களப் பணியாளர் கள் என்ற பெருமையை பெற தகுதியானவர்கள் தான். அதே நேரம் மின்சார ஊழியர்கள் அதற்கு சற்றும் குறைந்தவர்கள் அல்ல என்பதையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எல்லையில் எந்த நேரமும் தயார் நிலையில் உள்ள இராணுவ வீரனை போலவே மின்தடைகளை சரி செய்யவும், வருமுன் காக்க பராமரிக்க பணிகளையும் செய்யும் வீரனாக மின்வாரிய தொழிலாளி இருக்கின்றான். மின்வாரிய ஊழியர்களும், பொறியாளர்களும் செய்யும் மகத் தான பணி தான் கொரானா நோய் தொற்று காலத் தில் மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், சுகாதார மையங்களில் மின்சாரம் தடைப்படாமல் காக்கும் பணியை செவ்வனே செய்து வருகின்றார்கள்.

மின்வாரிய ஊழியர்களின் மகத்தான பணியை, சேவையை தியாகத்தை பாராட்ட தவர்கள் யாரும் இல்லை. ஒவ்வொரு பேரிடர் காலத்திலும் அரசுக்கு உதவியாக, அரசுக்கு நற்பெயரை எடுத்து தந்தவர்கள் மின்சார ஊழியர்கள். சென்ற ஆட்சியில் முன்கள பணியாளர்களாக அறிவிக்கின்றோம் என்று சொன்னவர்கள் இன்று இல்லை. இன்று புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் திமுகவின் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை தொழிற்சங்க கூட்டுக்குழுவின் சார்பாக சந்தித்தோம். முன்களப்பணியாளர்களாக அறிவிக்க கோரினோம்.

மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து பேசி சொல்வதாக சொன்னார். முதலமைச்சரின் கவனத்திற்கு சமூக வலைதளங்கள் மூலமாக மின் ஊழியர்கள், பொறியாளர்கள் கொண்டு சென்றுள்ளனர். கொரானா பெருந்தொற்று பாதிப்பால் இதுவரை 200-க்கும் மேற்பட்ட மின்சார ஊழியர்கள் தனது இன்னுயிரை இழந்துள்ளனர்.

இந்த நிலையில் புதிதாக பொறுப்பேற்ற திமுக அரசு, தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட அரசு, மின் ஊழியர்களின் தற்போதைய முதன்மை கோரிக்கையான முன்கள பணியாளர்கள் என்ற கோரிக்கையை நிறைவேற்றும் என்று நம்புவோம்....

**- தி.ஜெயசங்கர்**



## வாழ்த்துகிறோம்

கரூர் மின்பகிர்மான வட்டம், குறித்தலை கோட்டத்தில் சிறப்பு நிலை ஆக்க முகவராக பணிபுரிந்து, இளநிலை பொறியாளர் 2ம் நிலையாக பதவி உயர்வு பெற்ற தோழர் கே. காத்தான் அவர்கள் மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூபாய் 1000/- அளித்தார். வாழ்த்துக்கள். (தோழர் வி. சுப்பிரமணியன், கரூர் நகர கோட்டச்செயலாளர் மூலமாக)

# பணியாளர்களோ பற்றாக்குறையில்! பராமரிப்போ பரிதாப நிலையில்!



## பற்றியெரியும் அனல் மின் நிலையங்கள்! வேடிக்கை பார்க்கும் வாரியம்!

மேட்டூர் அனல் மின் நிலையம் 1-ல் கொதிகலனுக்கு நிலக்கரியை கொண்டு செல்லும் பாதையில் Juntion Tower என்று சொல்லப்படும் இணைப்பு கோபுரம் 10A, 10B யில் கடந்த 18.05.2021 அன்று அதிகாலையில் தீ விபத்தும் ஏற்பட்டது.

மிகமோசமான இந்த தீவிபத்து காரணமாக 330 மீட்டர் கன்வேயர் பெல்ட், கன்வேயர் பெல்ட் சுழல செய்யும். உருளைகள் அதனுடைய பிளாட்பாரம், ஸ்டாண்டுகள், HT கேபில்கள், மேற்கூரைகள் உள்ளிட்ட கட்டமைப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

இது போன்ற தீ விபத்து இதே கோபுரத்தில் கடந்த 10.05.2012-ல் நடந்தது. அப்போது ஒட்டு மொத்த கட்டமைப்பும் எரிந்து நாசமானதால் மறுகட்டமைப்பு செய்ய மட்டுமே சுமார் 20 கோடி ரூபாய் செலவானது மட்டுமன்றி, மறு கட்டமைப்பு முடிந்து மின் உற்பத்தி துவங்கும் வரையில் மின் உற்பத்தி நிறுத்தத்தினால் மட்டுமே சுமார் 5 கோடி தினமும் மின்வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது. அதோடு விலைமதிப்பற்ற இரண்டு மனித உயிர்கள் பலியானதை மின்வாரியமோ, மேட்டூர் அனல் மின் நிர்வாகமோ மறந்திருக்க வாய்ப்பில்லை.

10.05.2012-ல் ஏற்பட்ட தீவிபத்தினால் மின் உற்பத்தி பாதிப்பு மறு கட்டமைப்பு செலவுகள், இரண்டு உயிரழப்பு என்று அரசுக்கும், வாரியத்திற்கும் ஏற்பட்ட இழப்பு சுமார் 80 கோடி ரூபாய் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்திய இந்த தீ விபத்திலிருந்து வாரியம் நல்ல அனுபவத்தை கற்று கொள்ள வில்லை என்பது தான் வெளிப்படையான உண்மை. அதன் காரணமாக தான் தற்போது 18.05.2021-ல் ஏற்கனவே ஏற்பட்ட அதே கட்டமைப்பில் மீண்டும் அதே போன்று தீவிபத்து. தற்போது கட்டமைப்பு சீரமைத்தல் மற்றும் மின் உற்பத்தி பாதிப்பு என்று சுமார் 80 கோடி ரூபாய் வாரியத்திற்கு இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

10.05.2012-ல் ஏற்பட்ட தீவிபத்து அதனால் உற்பத்திக்கு ஏற்பட்ட நஷ்டம், இப்போது 18.05.2021 -ல் ஏற்பட்டுள்ள தீவிபத்து அதனால் ஏற்பட்ட நட்டம் இதற்கு யார் பொறுப்பு என்ற மிகப்பெரிய கேள்வி வாரிய நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரின் மனதிலும் எழத்தான் செய்கிறது.

10.05.2012-ல் தீவிபத்து ஏற்பட்ட போது எதன் காரணமாக தீவிபத்து ஏற்பட்டது என ஆய்வு செய்து அதை சரிசெய்திருந்தால், இப்போது இது போன்ற தீவிபத்து மீண்டும் எற்பட்டிருக்காது. அப்போது ஆய்வு செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்காத வாரியம் தான் இந்த இரண்டு தீவிபத்திற்கும் பொறுப்பேற்க வேண்டும். அப்படி பொறுப்பேற்காத வாரியத்தின் மீது யார் நடவடிக்கை எடுப்பது இது போன்ற கேள்விகளுக்கு இன்று வரை பதில் இல்லை.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மட்டுமல்ல வடசென்னை, தூத்துக்குடி அனல் மின் நிலையங்களில் கரிகையாளும் பகுதிகளில் நிலக்கரி தானாக எரிந்து சாம்பளாகவுதும், மின்சார கேபிள்கள் எரிந்து சாம்பாளவாதும், ஊழியர்கள் பாதிப்புக்கு உள்ளாகி பலியாவதும் தொடர்ந்து கொண்டு தான்

உள்ளது. இதை தடுப்பதற்கு வாரியத்திடம் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

அனல் மின் நிலையங்களில் இது போன்ற தீவிபத்து ஏற்படுவது குறித்து நாசவேலை காரணமாக இருக்குமோ என்ற சந்தேகத்தை ஒரு சில பத்திரிக்கைகள் எழுப்பியுள்ளதற்கும் கூட வாரியம் பதிலேதும் அல்லது மறப்பேதும் சொல்லாமல் இருக்கின்றதை என்னவென்று சொல்வது.

தமிழகத்தின் மின் தேவையில் மூன்றில் ஒரு பங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து கொடுத்து கொண்டிருப்பது தமிழக மின்வாரிய அனல் மின் நிலையங்கள் தான். அவ்வாறு தமிழக வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்பட்டு வரும் மேட்டூர், வடசென்னை அனல் மின் நிலையங்கள் அதன் உற்பத்தி திறன்களுக்கேற்ப எண்ணிக்கையில் ஊழியர்கள் இல்லாமலும் போதிய பராமரிப்பு இல்லாமலும் தள்ளாடி வருகிறது.

அனல் மின் நிலையங்களின் ஆரம்ப காலத்தில் அதன் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள, பொறியாளர்கள் பதவிகளை மட்டும் தேவையான அளவில் அனுமதித்தும் களப்பணியாளர் பதவிகள் பெயரளவிற்கு மட்டும் மிக மிக சொற்ப எண்ணிக்கையில் அனுமதிக்கப் பட்டும், அனல் மின் நிலைய பராமரிப்பு பணிகள் அனைத்தையும் குறைந்த கூலிக்கு ஒப்பந்த தொழிலாளர்களை நியமித்து மேற்கொண்டு வந்தது.

அதன்படி நான்கு அனல் மின் நிலையங்களிலும் சுமார் 12000-க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொரிலாளர்கள் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மேற்கண்ட ஒப்பந்த தொழிலாளர்கள் Labour Supply என்றும் Department Engaged Contract Labour என்றும் பயன்படுத்தப்பட்டு வந்ததால் பராமரிப்பு பணிகள் வாரிய அதிகாரிகளின் மேற்பார்வையில் சரியான வழிகாட்டுதலில் ஒப்பந்த தொழிலாளர்கள் திறமையாக செயலாற்றி வந்தார்கள். அதன் காரணமாக அந்த காலகட்டத்தில் 4 அனல் மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் மிகமிக சிறப்பாக இருந்தது. அனல் மின் நிலையங்களும் தனது இலக்கை கடந்து உற்பத்தியும் செய்து அதற்கான பரிசுகளையும், வெகுமதியும் பெற்று வந்தது.

நாளடைவில் அரசும், வாரியமும் கார்ப்பரேட் தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிக விலைக்கு மின்சார கொள்முதல் செய்ய ஒப்பந்தம் போடப்பட்டு, அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்முதல் செய்து வந்ததால் ஏற்பட்ட நஷ்டத்தை குறைக்க, ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற தவறான முடிவுக்கு வந்தது.

அதன் காரணமாக அனல் மின் நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, உற்பத்தி குறித்து கொஞ்சமும் கவலைபடாமல், அனல் மின் நிலையத்தின் செலவுகள் குறைக்க வேண்டும் என்று மின்சார வாரியம் எடுத்த தவறான முடிவின்படி NPC (Productivity Committee) என்னும் தேசிய உற்பத்தி திறனாய்வு குழு என்ற தனியார் நிறுவனத்திடம் ஊழியர் எண்ணிக்கை குறைப்பதற்கான ஆலோசனைகளை கேட்டு பெற்று ஆட்குறைப்பு நடவடிக்கையை எடுத்தது வாரியம்.

பல லட்சகணக்கான ரூபாய்களை செலவு செய்து NPC இடமிருந்து பெற்ற ஆலோசனையின் படி, ஊழியர்களை குறைக்க வாரியம் முடிவு செய்த போதும் அனல் மின் நிலையங்களை சிறப்பாக பராமரித்து இயக்க கூடுதல் ஊழியர்கள் தேவை என்று அனல் மின் நிலைய அதிகாரிகள் வாரியத்துடன் முறையீட்டு அனுமதி பெற்று தேவையான எண்ணிகைகளில் அனுபவமிக்க ஊழியர்களை கொண்டு பராமரிப்பு பணிகளை மேற் கொள்ளப்பட்டது. அனல் மின் நிலையயங்கள் சிறப்பாகவும், விபத்துகள் இன்றியும் செயல்பட்டு வந்தது. அவ்வாறு பணியமர்த்தப்பட்ட ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்பட்ட பிறகு பணிமூப்பு, இறப்பு, பதவி உயர்வு, ஊர்மாறுதல் என்ற காரணங்களால் வெகுவாக குறைந்த நிலையில் அனல் மின் நிலையங்களின் பராமரிப்பு பணி உழியர்கள் இல்லாமல் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அரசின் வாரியத்தின் தவறான மின்கொள்முதல் கொள்கை காரணமாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்ட அனல் மின் நிலையங்களின் ஊழியர்கள் எண்ணிக்கை குறைந்தும் அப்பணிகளை செய்திட Works Contract என்ற புதிய வடிவத்தில் ஒப்பந்தம் விட்டு பராமரிப்பு பணிகளை செய்வது என்ற தவறான முடிவுகளை எடுத்தது வாரியம். Works Contract என்ற முறையில் நிர்வாகத்தில் உள்ள அனுபவமிக்க யார் ஒருவரும் Works Contract எடுத்து ஒப்பந்தாரிடமோ, ஒப்பந்த தொழிலாளர்களிடமோ அனல் மின் நிலைய பராமரிப்பு குறித்து வழிகாட்டவோ,

மேற்பார்வையிடவோ முடியாத நிலை. எடுக்கும் ஒப்பந்ததாரர்கள் போட்டி காணமாக மிகவும் குறைந்த எஸ்டிமேட் தொகைக்கு ஒப்பந்தம் எடுத்து அப்பணிக்கு தேவையான எண்ணிக்கையில் ஊழியர்களை கொண்டு பணிமேற் கொள்வதற்கு மாறாக மிகமிக குறைந்த எண்ணிக்கைகளில் ஊழியர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளபடுவதால் பராமரிப்பு பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. இந்த நிலைமை அனல் மின் நிலைய அதிகாரிகளுக்கும் தெரியும் என்றாலும் ஒன்றும் செய்ய முடியாத கைவுறும் நிலையில் தான் அதிகாரிகள் இருக்கின்றார்கள்.

போதாகுறைக்கு தற்போது அனல் மின் நிலையத்திற்கு பெறப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு நிலக்கரியில் அதிக அளவு கலோரியும் அதிக தூசும் நிறைந்ததாக உள்ளது. அதன் காரணமாக கன்வேயர்பெல்ட் மூலம் நிலக் கரியினை கொதிகலனுக்கு கொண்டு சேர்க்கும் போது நிலக்கரியின் தூசுகள் கன்வேயர்பெல்ட் செல்லும் பாதையில் அமைக்கப்பட்டுள்ள தளங்களிலேயே படர்ந்து அதை அப்புறப்படுத்திட ஊழியர்கள் இல்லாததால் நாளடைவில் வெப்பம் காரணமாக சூடுபிடித்து எரிய ஆரம்பித்திருக்க வாய்ப்பு இருக்கிறது.

மேலும் தற்போது அனல் மின் நிலைய மின் உற்பத்தி தேவைப்படுவதால் அதிக அளவு நிலக்கரியை கன்வேயர் பெல்ட் மூலம் கொதி கலனுக்கு கொண்டும் செல்லும் பணியானது இரவு பகல் என்றில்லாமல் ஓயாமல் கன்வேயர் பெல்ட்கள் இயக்கப்படுவதால், பெல்டை சுழற்ற செய்யும் உருளைகளை சரியாக பராமரிக்கப்படாமல் தொடர்ச்சியாக இயக்கப்படுவதால் உருளைகள் சழல சுழல தீப்பொறி ஏற்பட்டு நடைபாதை தளத்தில் படர்ந்திருக்கும் கரிதூள்களில் தீப்பொறி பட்டு கரிஎரிந்து அதன் மூலம் மின்சார கேபிள்களும், கன்வேயர் பெல்ட் எரிந்திருக்க வாய்ப்பிருக்கும்.

ஆனால் மேற்சொன்ன முறையில் தீப்பிடித்திருந்தாலும் அதற்கான முழுபொறுப்பும் வாரியம் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். தரமான உருளைகள், கன்வேயர் பெல்ட், நிலக்கரி போன்றவைகளுக்கு பதிலாக தரமற்ற உதிரி பாகங்கள், கன்வேயர்பெல்ட், நிலக்கரியினை தருவித்து கொடுத்தால் தான் தீவிபத்து ஏற்பட்டது என்பது உண்மையென விளங்கும்.

அல்லது உதிரிபாகங்கள், கன்வேயர் பெல்ட் மற்றும் நிலக்கரி உள்ளிட்டவைகள் தரமாக இருந்திருக்கமானால், ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக தரமான அளவில், குறிப்பிட்ட கால அளவு இடைவெளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், தினமும் பராமரிப்பு ஊழியர்களால், வாரிய அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படவில்லை என்பதால் தான் தீவிபத்து ஏற்பட்டு இருக்கும் என்ற உண்மை விளங்கும்.

அல்லது பத்திரிக்கை செய்திகளில் வெளியிடப்பட்டுள்ளது போல ஒப்பந்தம் கிடைக்க வேண்டும் என்றோ அல்லது ஒப்பந்தம் கிடைக்க வில்லை என்றோ நாசவேலை காரணமாகவோ தீப்பிடித்திருக்க வேண்டும்.

எது எப்படியோ இரண்டு முறையும் ஒரே பகுதியில் தீப்பிடித்ததை எதிர்பராமல் நடந்த விபத்துக்கள் என்று எளிதில் கமடந்து போய்விட முடியாது. காரணம் தீ பிடித்தாலும் உடனடியாக முழுவதும் அதாவது ஒரு காகித துண்டு நொடியில் எரிந்து சாம்பலாவது போல கன்வேயர் பெல்ட் முழுவதும் எரிந்து சாம்பல் ஆகாது. அதே போல தான் உயரழுத்த மின்சார கேபிள்களும்,கடந்தமுறை ஏற்பட்ட தீ விபத்தின் போது 10A மற்றும் 10B யில் மட்டும் கன்வேயர் பெல்ட் மற்றும் மின்சார கேபில்கள் எரிந்து, அதனால் கோபுரத்தின் இரும்பு தூள்கள் மற்றும் தளத்தின் இரும்புதூள்கள் அனைத்தும் வலுவிழந்து சாய்ந்தது.

தற்போது ஏற்பட்ட தீ விபத்தில் 10A மற்றும் 10B மட்டுமல்ல அதை கடந்து JT-2 மற்றும் 9A மற்றும் 9B வரை தீ பரவி கன்வேயர் பெல்ட் மற்றும் மின்சார கேபில்கள் எரிந்தது. அதனால் 10A மற்றும் 10B கன்வேயர் பாதையின் மேற்தளத்தில் இரும்புதுாள்கள் மட்டும் வலுவிழந்து வளைந்து போனது.

ஒரு முனையில் தி பிடித்து மறுமுனைக்கு தீ பரவும் வரையில் தீ எச்சரிக்கை கருவிகள் ( Fire Allaram System) எச்சரிக்கை மணி ஒலிக்காதது எப்படி

ஒரு முனையில் தீ பிடித்தவுடன், அதனுடைய சூடு அல்லது அதனுடைய புகை வந்தவுடன் தீ எச்சரிக்கை கருவிகள் எச்சரிக்கை மணியை ஒலித்திருந்தால், விரைந்து சென்று தீயை அனைத்து கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் 10A மற்றும்

10B எரிந்து JT-2 மற்றும் 9A மற்றும் 9B வரை தீ பதவியிருந்தது என்றால் தீ எச்சரிக்கை மணி வேலை செய்யவில்லையா? அல்லது எச்சரிக்கை மணி அடித்தும், கண்டுகொள்ளாமல் இருக்கப்பட்டதா? 10A மற்றும் 10B எரிந்து JT-2 மற்றும் 9A மற்றும் 9B வரை தீ பரவும் எதிர்பார்த்து காத்திருக்கப்பட்டதா? என்ற சந்தேகங்கள் சாதாரண சாமானியனுக்கும் வரும், இதற்கெல்லாம் வாரியம் சொல்லப்போகும் பதில் என்ன?

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஒரே பகுதியில் இரண்டு முறை தீப்பிடித்து எரிந்ததால் மின் உற்பத்தி பாதிப்பு, அதனால் மிகப்பெரிய இழப்பு, கட்டமைப்பு சரிசெய்ய செலவு அத்தனைக்கும் மேலாக இரண்டு விலைமதிப்பற்ற மனித உயிர்கள் பலி என 180 கோடி அளவிற்கு இழப்பு. இது குறித்து வாரியம் விசாரித்திருக்க வேண்டும். தவறுக்கான அல்லது விபத்திற்கான காரணங்களை கண்டு பிடித்திருக்க வேண்டும். தவறு செய்தவர்களை அல்லது விபத்திற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க வேண்டும். மீண்டும் இதுபோல தவறுகள் விபத்துகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் இதில் எதுவும் நடந்திருக்கவோ, நடந்ததாகவோ தெரியவில்லை.

இனி இதுபோல நடக்காமல் அனல் மின் நிலையத்தை பாதுகாக்கவும், உற்பத்தியை உறுதி செய்யவும், நஷ்ட கணக்கை காரணம் காட்டாமல், நாயாபைசா கணக்கு பார்க்காமல்

★ வேகண்டிப்பாளரிலிருந்து கொதிகலனுக்கு நிலக்கரியை கொண்டு செல்ல தற்போது உள்ள Junction Tower போல எதிர்புறத்தில் இன்னுமொரு Junction Tower நிறுவலாம். அப்படி செய்தால் நிலக்கரி இறக்குவதில் ஏற்படும் சுனக்க கட்டணம் குறைய (Demmureger) வாய்ப்பு ஏற்பட்டு வாரியத்திற்கு கோடி கணக்கான ரூபாய் மிச்சமாகும்.

★ அனல் மின் நிலைய பராமரிப்பு பணிக்கென்று 01.05.1999-ல் அனுமதிக்கப் பட்ட அளவில் நிரந்தர தன்மையுடைய ஊழியர்களை கொண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

★ அரசு முடிவு, கொள்கை முடிவு, உதய் திட்டம் என்றெல்லாம் வாரியம் சப்பைகட்டு கட்டி கொண்டு, பராமரிப்பு பணிகளை ஒப்பந்த முறையில் தான் செய்ய முடியும் என்றால், அனல் மின் நிலையங்களில் 01.05.1999.க்கு முன்பு இருந்த போல Labour Supply அல்லது Department Engged Contract Labour என்ற முறையில் 01.05.1999-ல் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் ஒப்பந்த தொழிலாளர்களை நியமித்து அனல் மின் நிலைய அதிகாரிகளின் மேற் பார்வையில், வழிகாட்டுதலில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள செய்ய வேண்டும்.

★ மின்சார வாரியம் சமீபத்தில் வினியோக பிரிவில் ஊழியர்கள் பற்றாக்குறையை சரிசெய்திட கேங்மேன் பணியாளர்களை தேர்வு செய்தது போல, அனல் மின் நிலையங்களில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களையே அனல் மின் நிலைய கேங்மேன் பணியாளர்களாக தேர்வு செய்து. அனல் மின் நிலையம் அதிகாரிகளின் மேற்பார்வையில் அனல் மின் நிலையம் பராமரிப்பு பணிகளை தொய்வுயில்லாமல் மேற்கொள்ள வேண்டும். அல்லது நான்கு அனல் மின் நிலைய ஒப்பந்த தொழிலாளர்களை கடந்த காலங்களில் சொசைட்டி தொழிலாளர்களாக மாற்றி அமைத்து நிர்வாகம் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டது போல தற்போது பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு அனல் மின் நிலையங்களை பாதுகாத்திட வேண்டும்.

★ அனல் மின் நிலைய உற்பத்திக்கு தேவை யான அனைத்து உதிரிபாகங்களையும் தரமானதாக வழங்கிட வேண்டும்.

★ அநியாய விலைக்கு மின்கொள்முதல் என்ற தவறான நடைமுறையை கைவிட்டு, லாப நஷ்ட கணக்கினை பார்க்காமல் தமிழக மின்வாரிய அனல் நிலையங்களை முழுமையாக இயக்கி மின் உற்பத்திக்கு உத்தரவாதம்ட செய்திட வேண்டும்.

அனல் மின் நிலையங்களை, மின் வாரியத்தை பாதுகாத்திட நமது ஆலோ சனைகளை முன்வைத்து விட்டோம். புதிதாக அமைந்துள்ள அரசு, புதியதாக பொறுப்பேற்றுள்ள வாரியத் தலைவரும் பரிசிலிப்பார்களா? நடை முறைப்படுத்துவார்களா? அனல் மின் நிலை யங்களை பாதுகபார்களா பொறுத்திருப்போம்

**வீ. இளங்கோ**

மாநில துணை பொதுச்செயலாளர்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

# NTPL அனல் மின் நிலையத்தில் மத்திய அமைப்பு பெற்ற மகத்தான தீர்ப்பு



பத்தாண்டுகளுக்கு முன் தூத்துக்குடியில் 1000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தை NTPL நிறுவனம் துவக்கவுள்ளது என்கிற செய்தி தூத்துக்குடியை சுற்றியுள்ள மக்களுக்கு மிகப்பெரும் சந்தோஷத்தை கொடுத்தது. கடந்த 2001 -ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி அனல் மின் நிறுவனமும் இணைந்து 11/89 என்கிற விகிதாச்சாரத்தில் தூத்துக்குடியில் 1000 மெகாவாட் மின் உற்பத்தியை துவங்க திட்டமிட்டது. 2003-ம் ஆண்டு மத்திய அரசின் ஒப்புதலை பெற்று 1500 கோடி முதலீட்டில் பணிகளை துவக்கி கடந்த 18.05.2015-ம் ஆண்டு முதல் அலகின் வணிக உற்பத்தியையும் 29.08.2015-ம் ஆண்டு இரண்டாம் அலகில் வணிக உற்பத்தியையும் துவக்கியது.

தூத்துக்குடியில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என நம்பி இலவு காத்த கிளியாக இருந்த மக்களுக்கு NTPL வழங்கிய பரிசு ஒப்பந்த தொழிலாளர்கள். 1500 கோடி முதலீ ட்டில் அமைந்துள்ள நிறுவனத்தில் 1000 பேர் ஒப்பந்த தொழிலாளர்களாகவும் 200 பேர் நிரந்தர தொழிலாளர்களாகவும் கொண்டு இயக்குகிறது. மத்திய அரசின் நவரத்னா நிறுவனமாக நிறுவனம் முழுக்க முழுக்க ஒப்பந்த தொழிலாளர்களை கொண்டு அனல் மின் நிலையத்தை இயக்குவது மோசமான முன்னுதாரணம்.

தமிழ்நாடு மத்திய அமைப்பு NTPL அனல் மின் நிலைய கட்டுமான பணியின் போது விபத்தில் இறந்த பல புலம் பெயர்ந்த தொழி லாளர்களுக்கு உரிய நிவாரணத்தை பெற்று கொடுத்துள்ளது. NTPL அனல் மின் நிலையத்தில் கட்டுமான பணிகள் நடைபெறும் போதே சிஐடியு தொழிற்சங்கத்தை அமைக்க தொழிலாளர்கள் எடுத்த முயற்சி ஒப்பந்தகாரர்களாலும் நிர்வாகத்தாலும் தடுக்கப்பட்டது. ஒப்பந்த தொழிலாளர்களாக பணியாற்ற 1 லட்சம் முதல் 3 லட்சம்ட வரை பணம் கொடுதது வேலையில்லாத இளைஞர்கள் எப்படியாவது வேலை கிடைத்தால் போதும் என சேருகின்றனர். பணம் பெறுவதற்காக தொடர்ச்சியாக தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட போது தமிழ்நாடு மத்திய அமைப்பு தனியார் மின் உற்பத்தி கிளை தொழிலாளர் ஆணையரிடம் தொழிற்தாவா நடத்தி மீண்டும் வேலையை பெற்று கொடுத்துள்ளது.

அதன் மின் தொடர்ச்சியாக மத்திய அமைப்பு NTPL அனல் மின் நிலையத்தில் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு NLC அனல் மின் நிலையத்தில் பணி புரியும் ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டும் என சம வேலைக்கு சம ஊதியம் கோரி மத்திய அமைப்பின் தனியார் மின் உற்பத்தி கிளை சார்பாக துணை தலைமை தொழிலாளர் ஆணையர் (நடுவண்) முன் கடந்த 20.05.2019 அன்ற வழக்கு தொடர்ந்தது. கடந்த 2 ஆண்டுகளாக மதுரையிலும், சென்னையிலும் பல்வேறு கட்ட விசாரணைகள் நடைபெற்று வந்தது.

NTPL நிர்வாகம் தரப்பில் மத்திய அமைப்பின் தனியார் மின் உற்பத்தி கிளைக்கு இந்த வழக்கை நடத்த எவ்வித தார்மீக உரிமையும் இல்லை எனவும், ஒப்பந்த தொழிலாளர்கள் மின் உற்பத்தியிலேயே ஈடபடவில்லை அவர்கள் ஹவுஸ் கீப்பிங் பணிக்காக மட்டுமேபயன்படுத்தப்படுகிறார்கள் என பொய்யான வாதத்தை முன் வைத்தது.

மேலும் NTPL வேறு NLC வேறு என தர்க்கம் செய்தது மத்திய அமைப்பு தரப்பில் தொழிலாளர்

ஆணையரிடம் தொழிற்தாவா நடத்தி இரு தரப்பிற்கும் ஒப்பந்தம் உள்ளது எனவே இந்த வழக்கை நடத்த உரிமை உள்ளது எனவும், NLCயில் உள்ள அதிகாரிகள் தான் NTPLஅனல் மின் நிலையத்தில் பணிபுரிகின்றார்கள். NLC ஊதிய உயர்வு ஒப்பந்தம் இங்கே இருக்கக்கூடிய NTPL அதிகாரிகளுக்கும் பொருந்தும் எனவே NTPL, NLC இரண்டும் ஒரே நிறுவனம் தான் என வாதாடியது. இந்த வழக்கை நடத்த சிஐடியு மாவட்டக்குழு மற்றும் மத்திய அமைப்பின் முந்தைய தலைவர்கள் கே.விஜயன் மற்றும் எஸ்.எஸ். சுப்பிரமணியன் தேவையான வழிகாட்டுதல் களை வழங்கினர்.

இந்நிலையில் கடந்த 15.04.2021 அன்று துணை தலைமை தொழிலாளர் ஆணையர் அவர்கள் அனல் மின் நிலையத்திற்கு நேரிடையாக வந்து இறுதி கட்ட விசாரணையை நடத்தி பாய்லர். ஜெனரேட்டர் சாம்பர் கையாளும் பிரிவு, கரி கையாளும் பிரிவு ஆகிய இடங்களில் பணிபுரியக் கூடிய ஒப்பந்த தொழி லாளர்களை நேரடியாக சந்தித்து அவர்களுடைய பெயர், பணி தன்மை, சம்பளம் குறித்த விவரங்களை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது சிஐடியு நிர்வாகிகள் எஸ்.அப்பாதுரை மற்றும் எஸ்.கணபதி சுரேஷ் மற்றும் NTPL அதிகாரிகள் உடன் இருந்தனர். கடந்த 30.04.2021 அன்று துணை தலைமை தொழிலாளர் ஆணையர் அவர்கள் மகத்தான தீர்வத்தை வழங்கியுள்ளார்.

தீர்ப்பு விபரம்

- ★ கடந்த 07.08.2020 அன்று NLC ஒப்பந்த தொழிலாளர்களுக்கு செய்யப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம் NTPL அனல் மின் நிலையத்தில் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.
- ★ NTPL அனல் மின் நிலையத்தில் பணி புரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் NLC போல் இன்சூரன்ஸ் செய்யப்பட்டு மரணமடையும் தொரிலாளர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட வேண்டும். வளாகத்தில் மரணம் சம்பவித்தால் 30 இலட்சம் வழங்கப்பட வேண்டும்.
- ★ கரி கையாளும் பகுதியில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு NLC நிறுவனம் ஒரிசாவில் உள்ள ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதே சம்பளத்தை வழங்க வேண்டும் என தனி உத்திரவு.
- ★ 6 மாதங்களுக்கு ஒரு முறை பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும்.
- ★ ஒவ்வொரு மாதமும் வீட்டு வாடகைபடி, வாஷிங் அலவன்ஸ், தினசரி உணவுப்படி. போக்குவரத்து படி வழங்க வேண்டும்.
- ★ ஒப்பந்த தொழிலாளர்களை வேலையை விட்டு நிறுத்துவதும், பணம் பெற்று கொண்டு புதிய ஊழியர்களை நியமனம் செய்வது போன்ற புகார் தொடர்ந்து வருவதால், தலைமை செயல் அதிகாரி CEO அவர்கள் கவனத்திற்கு கொண்டு வராமல் எந்த ஒப்பந்த தொழி லாளியையும் பணி நீக்கம் செய்யக் கூடாது. ஒப்பந்த தொழிலாளி பெயர், பதவி, வேலையில் சேர்ந்த நாள், பணி புரியும் டிவிஷன், வேலை நீக்கம் செய்ப்பட்டால் அதற்கான காரணம் போன்ற தகவல்கள் உள்ளடக்கிய HR பதிவேடு துறை தலைவரால் பராமரிக்கப்பட்டு CEO அவர்கள் அதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.
- ★ புதிய ஊதிய உயர்வு 01.06.2021 முதல் அமல்படுத்தப்பட வேண்டும். அதன் படி கரிகையாளும் பகுதி ஊழியர்களுக்கு புதிய சம்பளம் மாதம் 25,536/- ஆகவும். தற்போதைய சம்பளத்தை விட மாதம் ஒன்றிற்கு உயர்வு அதிக பட்சம் ரூபாய் 14330/- குறைந்த பட்சம் புதிய சம்பளம் மாதம் ரூபாய் 28240/- தற்போதைய சம்பளத்தை விட மாதம் ஒன்றிற்கு உயர்வு ரூபாய் 9680/- ஆகவும் இதர பகுதி ஊழியர்களுக்கு புதிய சம்பளம் மாதம் 20,679.0/- தற்பேதைய சம்பளத்தை விட மாதம் ஒன்றிற்கு உயர்வு ரூபாய் 9400/- எனவும் குறைந்த பட்சம் புதிய சம்பளம் மாதம் ரூபாய் 22936 தற்போதைய சம்பளத்தை விட மாதம் ஒன்றிற்கு உயர்வு ரூபாய் 4375/- எனவும் இருக்கும்.

இந்த தீர்ப்பு தொழிலாளர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. தீர்ப்பை அமல்படுத்த மத்திய அமைப்பும், சிஐடியு மாவட்டக்குழுவும் அடுத்த கட்ட இயக்கத்திற்கு திட்டமிட்டுள்ளது.

**எஸ். அப்பாதுரை**
மாநில செயலாளர்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு



# மத்திய அரசின் முகத்திரையை கிழித்த கொரோனா தொற்று

உலகில் எந்த அரசாங்கமும் செய்யாத ஒன்று, யாரும் செய்ய வெட்கப்படும் ஒன்றை மத்திய அரசு இந்த கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலையில் செய்தது. இந்தியாவின் தலைநகர் டெல்லி உட்பட பல மாநிலங்களில் கொரோனா தொற்றால், ஆக்ஸிஜன் பற்றாக் குறையில் மக்கள் கொத்து கொத்தாக இறந்து கொண்டிருக்க, பிணங்களை எரிக்க 10 மணி நேரம் சுடுகாட்டில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவல நிலையில் மக்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் பரிதவித்துக் கொண்டிருக்கக் கூடிய இந்த சூழலில் மத்திய அரசு 2019-2020-ல் உள்நாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 1.45 இலட்சம் கோடிகள் கடன் தள்ளுபடி செய்துள்ளதாக செய்திகள் வந்தன. இந்தியா கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கும் நிலையில் மோடி அரசின் இந்த நடவடிக்கை இந்திய மக்களுக்கு இழைத்த மாபெரும் அநீதியாகும்.

கோவிட் பெருந்தொற்றை சமாளிக்க அரசு ஊழியர்களின் ஒன்னறை ஆண்டு பஞ்சப்படியை நிறுத்தியதோடு 2021-லும் பஞ்சப்படி இல்லை என்று அறிவித்த மத்திய அரசு தொடர்ந்து அரசு ஊழியர்களை வஞ்சிப்பதும், உள்நாட்டு கார்ப்பரேட் முதலாளிகளை காக்க மக்கள் சேமிப்பை முதலாளிகளின் கடன்களை தள்ளுபடி செய்ததாக வரும் செய்தி சாமான்ய மக்களை மேலும் மேலும் ஓட்டாண்டிகளாக்கும் செயலாகும். மத்திய அரசின் இந்த செயலானது வன்மையாக கண்டிக்கக் கூடியது. கொரோனா பெருந்தொற்றை சாதகமாக பயன்படுத்திக் கெண்டு மக்கள் வீதியில் இறங்கி போராட மாட்டார்கள் என்று எண்ணி தொடர்ந்து மக்களை வஞ்சிக்கும் மோடி அரசை மக்கள் மன்னிக்கப்போவதுமில்லை, மறக்கப் போவது மில்லை.

ஒவ்வொரு முறை பெருந்தொற்று ஏற்பட்ட போதெல்லாம் தடுப்பூசிகளை மத்திய அரசே இலவசமாக அனைத்து மக்களுக்கும் அளித்து வந்தது. இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதுமுள்ள நாடுகள் அனைத்துமே அரசே இலவசமாக வழங்கி வந்தது. ஏனெனில் மக்களை காப்பது அரசின் கடமை என்ற நிலையில் இருந்து அதை உலக அரசுகள் செய்தது. இதை ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேசம் என்ற பேசும் மோடி அரசு மூன்று விலைகளில் விற்க அனுமதியளித்தது. அடக்க விலை ரூ.150/- ஆக இருக்க ரூ.400/- 600/- ரூ.750/- என்று மூன்று விலைகள் நிர்ணயித்து முதலாளிகள் கொள்ளை யடிக்க உதவியது, இந்தியாவில் இதுவரை நாம் காணாத ஒன்று. மக்களின் சுகாதாரத்தில் வியாபார நோக்கத்தை கொண்டு வந்த மோடி அரசின் உண்மையான முகத்தை மக்கள் தற்போது தான் காண்கின்னர்.

ஏப்ரல் மாதம் 25 தேதியில் இந்தியாவின் தலைநகரம் டெல்லியில் ஆக்ஸிஜன் பற்றாக்குறையில், மருத்துவமனைகளில் படுக்கைகள் பற்றாக்குறையால் மக்கள் அவதிப்படுவதை ஊடகங்கள் வெளிச்சம் போட்டு காட்டின. டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் ஆக்ஸிஜன் கொடுங்கள் என்று மன்றாடி கேட்ட பிறகும் நிலைமையின் தீவிரத்தை உணராத மோடி அவர்கள் மேற்கு வங்க தேர்தலில் லட்சம் பேர் மத்தியில் வாக்கு சேகரித்து கொண்டிருந்தார். உ.பி. கும்பமேளாவில் பல லட்சம் பேர் திரண்டு புனித நீராடினார்கள் என்ற செய்தியானது கொரானாவை

வடமாநிலங்களில் காட்டுத்தீயாய் பரவி விடப்பட்டது என்பதை தற்போது உணர்ந்து கொண்டார்கள். இப்போது பல ஆயிரம் பேர் கொரோனா நோய் தொற்று ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய அரசு தடுப்பூசிகளை மாநிலங்களே பெற்று போட்டுக்கொள்ளலாம் என்று தனது பொறுப்பை தட்டிக்கழித்து விட்டது. இந்தியாவில் 18-45 வயதுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 60 கோடி. இவர்களுக்கு தடுப்பூசி வழங்க சுமார் 72 லட்சம் கோடிகள் செலவாகும். ஏற்கனவே மாநிலங்களுக்கு வரவேண்டிய வரிவருவாயும் இல்லை, மத்திய அரசு அளிக்க வேண்டிய GST தொகையும் அளிக்காத நிலையில் மாநில அரசுகளின் வருமானத்திற்கு என்ன வழி மத்திய அரசின் மாற்றத்தால் மனப்போக்கு மொத்த அதிகார குவிமையமாக மோடி அரசு இருப்பது இந்திய மக்களை வஞ்சிக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது. இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான ஊடகங்களை தனது தலையாட்டி பொம்மைகளாக வைத்துக் கொண்டு மக்களிடம் பொய்யான கருத்தியில் திணிப்பை செய்வதும், மோடி என்ற பிம்பத்தை உயர்த்தி பிடிப்பதும் இனி நடக்காது என்பதை தான் 5 மாநில தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. கேரளத்தில், தமிழகத்தில் தாமரை எப்போதும் மலராது என்பது தான் இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன. இதையெல்லாம் அறியாமல் மோடி அவர்களின் கார்ப்பரேட் காலனி ஆட்சி என்பது இனிமேலும் தொடர முடியாது. மக்கள் விழித்துக் கொண்டார்கள். கொரானோ விழிப்படையச் செய்தது.

இன்று மக்கள் அனைவருக்கும் தடுப்பூசியை விரைந்து செலுத்தி நோய் தொற்றில் இருந்து எவ்வாறு காப்பாற்றுவது என்று மாநில அரசுகள் தீவிரமாக உள்ளது. பா.ஜ. கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியசாமி அவர்கள் கொரோனாவின் தீவிரத்தை உணராத மத்திய சைக்கோ மந்திரிகளை நம்பாதீர்கள், மக்களே உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள் என்று டிவிட்டரில் பதிவிட்டுள்ளது நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகின்றது. இந்தியாவில் கொரோனாவில் அதிக பாதிப்பு ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் தினம் பலநூறு பேர் இறந்து போவதை அறிந்து சிங்கப்பூர், வளைகுடா நாடுகள், அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட 40-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து வந்த ஆக்ஸிஜனை பகிர்ந்து கொடுக்க ஒருவாரம் எடுத்துக்கொண்ட மோடி அரசு. இதனால் இறந்து போன பலநூறு மக்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது மத்திய அரசு.

இந்தியாவில் 1000 கோடிக்கும் மேல் சொத்து வைத்துள்ள 827 பெரும் பணக்காரர்களின் மொத்த சொத்து மதிப்பு 2019-ல் ரூ. 37 லட்சம் கோடிகள்.பெருந்தொற்று காலத்திலும் இவர்களின் சொத்து 2019-ஐ காட்டிலும் 20 சதம் கூடியுள்ளது. இவர்களின் சராசரி வருமானம் ஆண்டுக்கு 7300 கோடி இவர்களின் சொத்து மதிப்பு உள்நாட்டு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு உள்ளது. இந்த 827 பேருக்கு 1.6 சதம் கோவிட் வரி விதித்தாலே போதும் 60 கோடி மக்களுக்கு தடுப்பூசியை



முழுமையாக போட முடியும். மத்திய அரசு செய்யலாம். அரசு ஊழியர்களின் பஞ்சப்படியை முடக்கும் மத்திய அரசு இதை தாராளமாக செய்யலாம். இதை செய்தால் மாநிலங்களின் சுமை குறையும். ஆனால் மத்திய மோடி அரசு இதை செய்யாது. ஏனெனில் மக்கள் நலனை விட கார்ப்பரேட் நலன் தான் முக்கியம் என்று மோடி அரசு நினைக்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் உலகில் சில நபர்களிடம் மட்டும் அதிர்ச்சியூட்டும் அளவில் பெரும் செல்வம் குவிந்துள்ளது. வெறும் 10 தனி நபர்கள் ஏப்ரல் முதல் வாரத்தில் மட்டும் பங்கு சந்தை மூலம் 3.9 லட்சம் கோடிகளை குவித்துள்ளனர். இதே கால கட்டத்தில் கொரானோவால் வாழ்வாதாரம் அழிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்கள் வேலை இழந்து வறுமையின் கோரபிடியில் சிக்கியுள்ளனர். இதில் முகேஷ் அம்பானிக்கு மட்டும் ரூ. 38,000/- கோடி கிடைத்துள்ளது. வரி ஏய்பு வரி தள்ளுபடி என்ற வகையில் கூகுள் மற்றும் பேஸ்புக் நிறுவனங்கள் 2 சதம் வரி என்ற முறையில் 200 கோடி கட்டிவிட்டு ரூ. 10,000 கோடிகளை அள்ளி சென்றது. இவ்வாறு இந்திய பெருமுதலாளிகள் இந்திய அரசால் மோடி அரசால் பெருத்த லாபத்தை அடைகின்றனர்.

சாமான்ய மக்களின் சிறுசேமிப்புகள் இந்திய முதலாளிகளுக்கு வரிச்சலுகையாக கடன் தள்ளுபடியாக அளிப்பதனால் ஏழைகள் மேலும் பரம ஏழைகளாக மாற்றப்பட்டு வருகின்றனர். எந்த காரணங்களை சொல்லி காங்கிரஸ் அரசை குற்றம் சொல்லி ஆட்சிக்கு வந்தார்களோ அவர்கள் அதை விட கூடுதலான தவறுகளை செய்து மக்களை வஞ்சித்து வருகின்றார்கள். மோடியின் ஆட்சியில் பாதிக்கப்படாத மக்களே கிடையாது என்று சொல்லுமளவிற்கு மக்களின் துயரங்கள் தொடர்கின்றது. கொரோனா இரண்டாம் அலை மக்களை சுனாமி போல தாக்கி வருகின்றது. ஆதரவு சொல்ல வேண்டிய ஒன்றிய அரசு, உதவிக்கரம் நீட்ட வேண்டிய மோடி அரசு இதிலும் பேதங்கள் பார்க்கின்றது.

ஜாதியாக மதமாக மக்களை பிளவுப்படுத்தி, மக்களிடம் தவறான கருத்தியலை ஊடகங்கள் மூலமாக கொண்டு சேர்த்து MLA, MP க்களை விலை பேசி அதிகாரத்திற்கு குறுக்கு வழியில் வரமுயலும் மத்திய மோடி அரசுக்கு கேரளமும்,தமிழகமும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இனி ஆட வேண்டிய ஆட்டம் தொழிலாளி வர்க்கத்தின் கையில் உள்ளது. மோடிக்கு எதிரான அலை துவங்கி விட்டது. இனி எந்த பிரிவினை சக்தியாலும் மோடியின் தோல்வியை தடுத்து நிறுத்த முடியாது. துவக்கவுரையை கேரளமும், தமிழகமும் எழுதியுள்ளது. முடிவுரையை இடது சாரிகள் எழுதி முடிப்பார்கள்.

மாற்றமே நிலையானது.... மாற்றத்தை
நோக்கி பயணிப்போம்....

**- தி.ஜெயசங்கர்**

## தோழர் கே.பாலகிருஷ்ணன் மறைவு



மின் ஊழியர் மத்திய அமைப்பின் ஈரோடு கிளைச் செயலாளரகவும், மண்டல செயலாளர் மற்றும் மாநிலச் செயலாளராகவும் திறம்பட செயலாற்றியவர். ஈரோடு மண்டலத்தில் மத்திய அமைப்பை கட்டிக்காத்ததில் பெரும்பங்கு தோழர் கே.பாலகிருஷ்ணனுக்கு உண்டு. தனது பணி ஓய்வுக்கு பின் ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் ஈரோடு மண்டல செயலாளராக பணியாற்றி வந்தார். தோழர் பாலகிருஷ்ணன் உடல் நலக்குறைவால் 09.06.2021 அன்று காலமானார். தனது எளிமையான பேச்சால் அனைவரையும் கவர்ந்தவர், தோழர் கே.பாலகிருஷ்ணன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் மத்திய அமைப்பின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# பெருந்தொற்று காலத்தில் (Covid-19)
# மின் ஊழியர்கள் சமூகப்பணி

பெருந்தொற்று காலத்தில் மின் ஊழியர்கள் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்ட எழை எளிய மக்களுக்கு பகுதி நேர ஒப்பந்த ஊழியர்களுக்கு அரிசி, உணவு பொட்டலங்கள், மளிகை சமான்கள் என தொடர்ந்து உதவிகள் செய்து வருகின்றனர் என்பது மிகவும் பாராட்டுக்குரியது. அரசு ஊரடங்கு அறிவித்த பிறகு மக்கள் வேலையிழந்து வறுமையில் வாடிய நிலையில் அவர்களுக்கு உதவிட வேண்டும் என்ற மனிதாபிமான சிந்தனையை தூக்கி பிடித்த மத்திய அமைப்பின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் மாநில மையத்தின் சார்பாக பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம். தொடரட்டும் உங்கள் சமூகப்பணிகள்

**கோவை கிளைகள்**

ஏப்ரல் மாதம் 14 அன்று டி.ஜே. நினைவு தினத்தையொட்டி கோவை சங்கமனையில் 30 ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் பகுதிநேர ஊழியர்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் காய்கறிகள் கொண்ட தொகுப்பு பை கொடுக்கப்பட்டது.

மே மாதம் பி.சி.வேலாயுதம் நினைவு தினத்தை கோவை சங்கமனையில் 25 பேருக்கு 5 கிலோ அரிசி காய்கறிகள் தொகுப்பு கொண்ட பை கொடுக்கப்பட்டது.

மேலும் கடை நிலை பணியாளர் குடும் பத்தின் மகள் டாக்டர் படித்து மருத்துவராக்கியது சாதனைக்கு வாழ்த்து தெரிவித்தார்கள். சாலையோர மக்கள் 100 பேருக்கு உணவு வழங்கினர். 08.05.2021 முதல் வி.பிசி. நினைவு தினத்தையொட்டி ஒருநாள் விட்டு ஒரு நாள் CE - CBE வாரிய வளாகத்தில் கபசுர குடிநீர் மற்றும் நெல்லிக்கனியும் கொடுத்து வருகின்றனர்.

**திருவண்ணாமலை வட்டம் - செய்யாறு கோட்டம்**

செய்யாறு கோட்டம் எறையூர் கிராமத்தில் வசிக்கும் மலைவாழ் மக்கள், 50 குடும்பங்களுக்கு அரிசி,காய்கறிகள் மத்திய அமைப்பு சார்பாக 05.06.2021 அன்று தோழர் வி.எம். வெங்கடேசன் கிளைப் பொருளாளர் மூலம் வழங்கப்பட்டது.

**எண்ணூர் அனல் மின் நிலையம்**

தோழர் கே. வெங்கட்டையா, கே. வெங்கடேசன் மற்றும் சென்னை வடக்கு தோழர்கள் இணைந்து சாலையோர மக்கள், விளிம்பு நிலை மக்கள் ஆகியோருக்கு எண்ணூர் பகுதியில் கடந்த மே 15 முதல் ஒருநாள் விட்டு ஒருநாள் 250 பேருக்கு உணவு பொட்டலங்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றனர். இவர்களின் நற்செயலை பாராட்டி இந்து நாளிதழ், தீக்கதிர், தமிழக தகவல்கள் போன்ற பல ஊடகங்களில் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இவர்கள் பாதிக்கப்பட்டவர்களை தேடி,தேடி, சென்று உதவி வருகின்றனர்.

**சென்னை வடக்கு கிளை**

சென்னை வடக்கு கிளை தோழர் சத்யா, மதன் தலைமையில் மாதவரம் பகுதியில் 22 குடும்பங்களுக்கு 10 கிலோ அரசியும், பொன்னேரி கோட்டத்தில் உள்ளள பகுதிநேர பணியாளர்கள் 18 பேருக்கு தலா 15 கிலோ அரிசியும், தண்டையார் பேட்டை , வியாசர்பாடி, பெரம்பூர் கோட்டங்களில் உள்ள பகுதிநேர பணியாளர்கள் 25 பேருக்கு 10 கிலோ அரிசியும் வழங்கப்பட்டது. இது மட்டுமன்றி ரூ. 10,000/- எண்ணூர் கட்சி கமிட்டிக்கு உணவு சமைக்க அளித்தனர். அதே போல11.06.2021 அன்று மாதவரம், மணலி பகுதியில் உள்ள ஏழை எளிய குடும்பங்கள் 30 பேருக்கு 5 கிலோ அரிசி மற்றும் மளிகை பொருட்கள் கொண்ட பை கொடுத்தனர்.

**மத்திய சென்னை கிளை மற்றும் டி.ஒய்.எப்.ஐ**

மத்திய சென்னை கிளை நிர்வாகிகள் மற்றும் வாலிபர் சங்கம் இணைந்து பன்னோக்கு மருத்துவமனை கல்தூரிபாய் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நலமருத்துவமனை, வில்லிவாக்கம், எழும்பூர், அண்ணாநகர், ஆயிரம் விளக்கு போன்ற பகுதிகளில் மதிய உணவு பொட்டலங்களை அளித்து வருகின்றனர். சாலையோர மக்கள், மருத்துவமனையில் காத்து நிற்கும் ஏழை மக்கள், மார்க்கெட் பகுதியில் உள்ள ஏழை எளிய உழைப்பாளிகள் ஆகியோருக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. மே 26 முதல் ஜூன் 14 வரை 3000 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய சென்னை மாவட்ட கட்சி/ சங்கமுன்னணி ஊழியர்கள் குடும்பங்கள் 50 பேருக்கு ரூ. 1000/- மதிப்புள்ள அரிசி மற்றும் மளிகை பொருட்கள் கொண்ட தொகுப்பு பை தோழர்கள் ம. தயாளன், வ. சீனிவாசன், எஸ். கண்ணன், எஸ். முருகவேல் ஆகியோர் முன்னனியில் அன்று வழங்கப்பட்டது.

**திருநெல்வேலி**

தென்காசி, வள்ளியூர் உள்ளிட்ட பகுதிகளில் உணவு பொருட்களை வழங்கினார்கள்.




# ERP புகுத்துவது உடனடி தீர்வாகுமா?

**ERP** என்றால் **Enterprise resource Planning** நிறுவன வளர்ச்சிக்கு திட்டமிடல் என்பதாகும். மின்வாரியத்தில், கம்பம் நடுவது, கம்பி இழுப்பது, மீட்டர் மாற்றுவது, மின் தடை நீக்கம் உள்ளிட்ட பணிகளை தவிர இதர அனைத்து பணிகளையும் **ERP** என்ற சாப்ட் வேரில் தான் செய்ய வேண்டும்.

இது ஒரு வணிக மேலாண்மை மென்பொருள். ஒருங்கிணைந்த பயன்பாட்டிற்கான விண்ணப்பம் ( Application) இது நிறுவனத்தின் வணிகத்தின் Data க்களை நிர்வகிக்க உதவுகிறது. மேலும் அனைத்து ஊழியர்களுக்கும் வாரியத்தின் நிகழ்நேர தகவல்களை வழங்குவதன் மூலம், மதிப்பு உயர்த்த **ERP** முறை சிறந்தது. (இப்படி எல்லாம் பில்டப்) நல்ல விஷயம் நடந்தால் சரி, ஆனால் இதை ஏதாவது ஒரு கோட்டத்தில் பைலட் திட்டமாக அமலாக்கி அதை Study செய்து அதன்பின் அந்த வட்டத்தில் அமலாக்கி, பின்பு தொடர்ச்சியாக மாநிலம் முழுவதும் அமலாக்கி இருக்க செய்திருக்க வேண்டும்.

ஏற்கனவே **IMS ( Integrated Management System)** க்கு மாறி தற்போது தான் அதில் நமது ஊழியர்கள் தயாராகி வரும் நிலையில், **ERP**யில் தான் தளவாட பொருட்கள் வாங்க வேண்டும், Estimate போட வேண்டும் எல்லாமே **ERP**யில் தான் என்று யாருக்குமே தெரியாத ஒரு சிஸ்டத்தை ஒருநாள் புகுத்தி விட்டார்கள்.

விளைவு பண்டகசாலையில் பொருட்கள் வாங்க முடியாமல் T. Note-ல் வாங்க சொல்லி உத்திரவு T. Note மூலம் வாங்கும் பொருட்களை Regularise செய்வதற்குள் பண்டக காப்பாளர் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கு தலைவலி தான்.

தொடரமைப்பு கழகத்தில்,பணப்பட்டியல்களை **ERP** யில் போடச்சொல்லி முடியாத காரணத்தால் ஒப்பந்ததாரர்களின் அழுத்தத்தால் இறுதியாக பழைய முறையில் (பேப்பரில்) அனுமதிக்கப்பட்டு காசோலை வழங்கப்பட்டதாக தகவல்.

இதில் என்ன கொடுமை என்றால் **ERP -** App -ல் இந்த சந்தேகம் கேட்டால் தலைமைப் பொறியாளர்/ தொழில்நுட்பம் அவர்களது அலுவலகத்தில் கூட முழுமையாக நிவர்த்தி செய்ய போதுமான முழுமையாக விவரம் அறிந்தவர்கள் இல்லை.

நவீன தொழில்நுட்பம் கொண்டு வருவதில் வரவேற்க வேண்டிய நிலையில் இருந்தாலும் புதிய வேலை வாய்ப்புகளை பறிக்காமல் இருப்பது அவசியமானது.

தற்போது ஒரு User-க்கு ரூ.30,000, ஆண்டொன்றுக்கு செலுத்த வேண்டிய தொகை என தகவல் அனைத்து பிரிவு அலுவலகங்களுக்கு தலா 5 User எனில் 2875 பிரிவுகளுக்கும் 675 உபகோட்டங்களுக்கும் 169 கோட்டங்களுக்கும் 44 மின் மின் விநியோக வட்டங்களுக்கும் மற்றும் இதர உற்பத்தி வட்டங்களுக்கும் வாரிய தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் இதர இடங்களுக்கும் சேர்த்து குறைந்தபட்சம் 25,000 User கள் தேவைப்படும் நிலையில் உள்ளது.

கடந்த காலத்தில் LT Billing-ல் மின்வாரியம் நவயுகா என்ற கம்பெனிக்கு செலுத்த வேண்டிய தொகை காலதாமதம் ஏற்பட்டால் திடீரென PASSWARD LOCK செய்த காரணத்தால் தமிழகம் முழுவதும் ஒரு நாள் மின் கட்டண வசூல் பணியில் பாதிப்பு ஏற்பட்டது என்பதோடு மின் வாரியத்திற்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது.

ஆகவே தான் PILOT PROGRAMME ஒரு கோட்டத்தில் **ERP**-ஐ அமலாக்கி அதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்து அதன் பின் மாநிலம் முழுவதும் அமலாக்கம் வேண்டும் என்பது மின் ஊழியர் மத்திய அமைப்பின் வேண்டுகோள்.

**- எஸ். இராஜேந்திரன்**

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

தலைவர் **தி. ஜெயசங்கர்** | பொதுச் செயலாளர் **எஸ்.இராஜேந்திரன்** | பொருளாளர் **எம்.வெங்கடேசன்**


நாள்: 14.06.2021

**பெறுநர்**
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
**144, அண்ணாசாலை, சென்னை 600 002**
**ஐயா,**

**வணக்கம்**

**பொருள் : நிர்வாகம் - நிறுவன வளர்ச்சிக்கு திட்டமிடல் ( ERP ) கட்டமைப்பு அலைவரிசை - தொடர்பாக**

தமிழ்நாடு மின்வாரியத்தில் களப்பணிகளை அதாவது கம்பம் நடுவது, கம்பி இழுப்பது, மீட்டர் பொறுத்துவது. மின்தடை நீக்கம் உள்ளிட்ட பணிகளை தவிர அனைத்து பணிகளையும் மென் பொருளில் ( Software ) செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் அதே நேரத்தில் பைலட் திட்டத்தின் அடிப்படையில் இந்த ERP மென் பொருள் பயன்படுத்துவதை ஏதாவது ஒரு கோட்டத்தில் அமலாக்கி முழுமையாக அதில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்து அதன் பின் அந்த மின் விநியோக வட்டத்தில் அமலாக்கி அதன் பின் தொடர்ச்சியாக மாநிலம் முழுவதும் அமலாக்கம் செய்திருக்க வேண்டும்.

இந்த ERP மென் பொருளை உடனடியாக அமலாக்கம் செய்ததின் விளைவாக பண்டகசாலையில் தளவாட பொருட்கள் வாங்க முடியாமல், T. Note மூலம் வாங்கி பணிகளை செய்ய வேண்டியுள்ளது. T.Note நேர் செய்வதற்குள் ( Regularise ) பிரிவு அலுவலர்களுக்கும், பண்டக காப்பாளர்களுக்கும் பெரும் பிரச்சனையாக மாறிவிடும் சூழல் உள்ளது.

தற்பொழுது தான் மின்வாரியத்தில் IMS தொழில்நுட்பத்திற்கு முழுமையாக மாறி, பணியாளர்கள் பணி செய்து வரும் வேளையில் இது புதிய மென் பொருளை புகுத்தியிருப்பது தமிழகம் முழுவதும் பணிகளை பாதிப்படையச் செய்துள்ளது.

மேலும்,

1. இந்த மென் பொருளை ஏதாவது ஒரு கோட்டத்தில் பைலட் திட்டத்தின் அடிப்படையில் அமலாக்கி சீர்செய்திட வேண்டுகிறோம்.
2. மென்பொருள் ( Software ) எளிதில் உபயோகிக் கூடிய வகையில் இருக்கப்பட வேண்டும்.
3. அலைவரிசை அதிகப்படுத்த வேண்டும்.
4. கணினிகள் புதிய மென்பொருள் பதிப்பு ( LATEST VERSION OF HARDWARE ) பிரிண்டர் மற்றும் ஸ்கேனர், ஆகியவை வழங்கப்பட வேண்டும்.
5. பணிபுரிய வேண்டியுள்ள அனைவருக்கும் தொழில்நுட்பத்தை கற்றுத்தர குறுகிய கால பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
6. திட்ட அளவில் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator ) இருக்க வேண்டும்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள
**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


**நாள்: 14.06.2021**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - கேங்மேன் - பணியாளர்களின் பயிற்சி காலத்தை ரத்து செய்வது - தொடர்பாக

பார்வை : (Per) FB TANGEDCO Proceeding No. 5 dt 16.03.2018

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 9613 கேங்மேன் பணியாளர்கள் கடந்த பிப்ரவரி 2021 மாதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். இவர்களது பணி நியமனம் தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் கலந்து பேசாமலும், தன்னிச்சையாகவும் இந்த பதவி உருவாக்கப்பட்டது. கேங்மேன் பணியேற்பு செய்தவர்களுக்கு இரண்டாண்டுகளுக்கு பயிற்சி தொகுப்பு ஊதியமாக ரூ. 15000/- என நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)-ன் கீழ் கடந்த 22.02.2018 அன்று மின்வாரியத்தில் வேலைபளு, ஊதிய உயர்வு முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது தொழிற்சங்கங்களின் வேண்டுகோளையடுத்து அனைத்து பணியாளர்களுக்கும் 3 மாத பயிற்சி காலம் என்ற சரத்து சேர்த்து ஒப்பந்தம் காணப்பட்டது. அதனை அடுத்து பார்வையில் கண்ட மின்வாரிய உத்தரவும் வெளியிடப்பட்டது.

ஆனால் மின்வாரிய நிர்வாகம் வெளியிட்ட வாரிய உத்தரவை மின்வாரியமே கடைபிடிக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பார்வையில் கண்ட வாரிய உத்தரவின் அடிப்படையில் கேங்மேன் பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள் என்பதை மூன்று மாதங்களாக மாற்றி கேங்மேன் பணியாளர்களுக்கு 16200-51500 என்ற சம்பள விகிதத்தின் அடிப்படையில் ஊதியத்தை நிர்ணயம் செய்ய கேட்டுக்கொள்வதோடு தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

**நன்றி !**

தங்கள் உண்மையுள்ள

(எஸ்.இராஜேந்திரன்)
பொதுச்செயலாளர்

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |

பெறுநர் நாள்: 14.06.2021

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,வணக்கம்

பொருள் : **ஊர் மாற்றல் மற்றும் பதவி உயர்வுகள் உத்தரவு வழங்கும் போது வாரிய உத்தரவுகளையும், வாரிய விதிகளையும் பின்பற்றி உத்தரவு வழங்க கோருவது - தொடர்பாக**

மின்வாரியத்தில் களப்பணி எழுத்துத்துறை, பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஊர்மாற்றல் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கும் போது வாரிய உத்தரவுகளையும், விதிமுறைகளையும் பின்பற்றி உத்தரவுகள் வழங்குவது தொடர்பாக எங்களது கருத்துகளை தெரிவிப்பதோடு உடனடி நடவடிக்கையும் எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

மின்வாரியத்தில் நிர்வாகப்பிரிவிலும், செயலக பிரிவிலும் ஊர்மாற்றல் மற்றும் பதவி உயர்வுகளுக்கான உத்தரவுகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக ஊர் மாறுதல் கொள்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1ம் தேதி முதல் 20 வரையிலும் ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் 15 வரையிலும் விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை ஆன்லைனில் பதிவு செய்து மாறுதல் உத்திரவு பெறலாம் என்று வாரிய உத்தரவுகள் உள்ளன. நூற்றுக்கணக்கான ஊழியர்களும், பொறியாளர்களும், அதிகாரிகளும் விண்ணப்பம் செய்கின்றனர். ஆனால் வாரிய விதிகளின்படி உத்தரவுகள் பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை. கடந்த காலங்களில் வழங்கப்படும் உத்தரவுகள் சிபாரிசு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது. ஊர்மாறுதல் விதிகளை மதிக்காமல் வாரிய உத்தரவை மீறியே இங்கு உத்தரவுகள் வெளிவருகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக இந்த நிலை தொடர்கின்றது. இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். விருப்ப ஊர் மாறுதல் விண்ணப்பங்கள் காலதாதம் செய்யாமல் விண்ணப்பங்கள் பெற்ற 30 நாட்களில் உத்தரவு வழங்கினால் தவறுகள் நடக்காமல் தவிர்க்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே போல பதவி உயர்வு மற்றும் மறு இடஒதுக்கீட்டில் வாரிய விதிகள் பின்பற்றபடுவதே இல்லை. அதிகாரிகள் சிபாரிசு, அரசியல் தலையீடு என மின்வாரிய நிர்வாகத்தின் மீது நம்பக தன்மையற்று கறை படிந்த ஒன்றாக மாறிவிட்டது. நீதியை நேர்மையை சட்டத்தை நிலைநாட்ட ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று தற்காத்துக் கொள்ளும் நிலைக்கு ஊழியர்களும், பொறியாளர்களும் தள்ளப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தை அனுகாத அப்பாவி பணியாளர்கள், பொறியாளர்கள் தகுதியிருந்தும், திறமையிருந்தும், முதன்மை இருந்தும் சிபாரிசு இல்லாததால் தண்டிக்கப் படுகின்றார்கள். வாரிய விதிகளும் வாரிய உத்தரவுகளும் சிபாரிசுக்கு முன்னால் வாய்மூடி மௌனமாக உள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஊர்மாற்றல் உத்தரவுகள், விதிகள் மற்றம் பதவி உயர்வின் போது கடைபிடிக்க வேண்டிய உத்தரவுகளை சமரசமின்றி, விருப்பு வெறுப்பின்றி கடைபிடித்து நேர்மையாகவும். வெளிப்படை தன்மையாயோடும் வெளியிட தகுந்த அறிவுரையை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

(எஸ்.இராஜேந்திரன்)

# சரண்டர் விடுப்பு மேலும் ஒரு ஆண்டுக்கு நிறுத்தி வைப்பு சம்மந்தமான வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

Fundamental Rules – Periodical surrender of Earned Leave and payment of Leave Salary – Suspended for one more year till 31.03.2022 – Orders issued by the Government of Tamil Nadu – Adoption in TANGEDCO – Orders – Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(PER) CMD TANGEDCO PROCEEDINGS NO.113, DATED THE 19TH MAY, 2021.**

Vaikasi-5, Pilava Aandu,
Thiruvalluvar Aandu-2052.

**READ:**

**1.** G.O.Ms.No.48, P&AR (FR-III) Department, dated 27.04.2020.
**2.** (Per) FB TANGEDCO Proceedings No.15 (SB), dt.28.05.2020.
**3.** (Per) CMD TANGEDCO Proceedings No.129 (SB), dt.24.08.2020.
**4.** G.O.Ms.No.48, P&AR (FR-III) Department, dated 13.05.2021.

*******

**PROCEEDINGS:**

Based on the G.O. first read above, orders were issued for suspension of the facility of the periodical surrender of Earned Leave for encashment for 15 days every year/30 days every two years, initially for a period of one year to all the officials/employees of TANGEDCO, due to the fiscal stress arising from the COVID-19 pandemic - vide Proceedings second and third read above.

**2.** Now, the Government in its G.O. fourth read above have issued orders, extending the suspension of periodical surrender of Earned Leave for encashment for days every year/30 days every two years by the Government servants/Teachers, for one more year till 31.03.2022 in view of the second wave of Corona and the need to conserve resources to fight the pandemic. It has also been ordered therein that the said orders shall be applicable to all Statutory bodies including all State Corporations, Local Bodies, Boards, etc.

**3.** Accordingly, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited hereby orders that the benefit of periodical surrender of Earned Leave for encashment for 15 days every year/30 days every two years by officials/employees of TANGEDCO, be suspended for one more year till 31.03.2022.

**4.** The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**M.BHAVANI,**
**SECRETARY.**

# களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு இருவழிப்பாதை - ஒரு வழிப்பாதையாக மாற்ற வாரிய ஆலோசனை

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நிர்வாகக் கிளை

. . .

அனுப்புநர்

பொறிஞர்.தெ.ரவிச்சந்திரன், பி.இ.,
தலைமை பொறியாளர்/பணியமைப்பு,
144, அண்ணா சாலை,
சென்னை 600 002.

பெறுநர்

பொது செயலாளர்கள்-

மின் கழக 18 தொழிற்சங்கங்கள்

கடித எண்.034374/414/ஜி.46/ஜி.462/2016-25, நாள்.06.05.2021.

ஐயா,

பொருள் நிர்வாகம் - களப் பணியாளர்களின் பதவி உயர்வு - தற்போதைய இருவழி பாதை பதவி உயர்விலிருந்து ஒருவழி பாதை பதவி உயர்வு அறிமுகப்படுத்துவது தொடர்பாக - தொழிற்சங்களின் கருத்துரு வேண்டுவது — தொடர்பாக.

*****

களப்பணியாளர்களின் முகவர் முதல் நிலை பதவி உயர்வின் போது பணியாளர்களிடையே ஏற்பட்ட முதன்மை தொடர்பான பிரச்சனை காரணமாக, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் சில தொழிற்சங்கங்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்ந்த வழக்கில், மின்பாதை ஆய்வாளர் பதவி உயர்வில் மட்டும் இருந்த 8 வருட பணிக்கால அனுபவத்தை குழு அறிக்கையின்பேரில் 5 வருட பணிக்காலமாக குறைத்து, மின்பாதை ஆய்வாளர் மற்றும் வணிக ஆய்வாளர் இரு பதவிகளுக்கும் 5 வருட பணிக்காலத்தை கொண்டு முகவர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கிடவும், அதனை வாரிய விதிகளில் திருத்தம் கொண்டு வரவும் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் அளித்த உத்தரவின்படி, வாரிய விதிகளில் திருத்தம் செய்ய வேண்டி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டபோது, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களால் தற்போதைய களப்பணியாளர்களின் இருவழிபாதை பதவி உயர்விலிருந்து (Double Channel Promotion) ஒருவழிபாதை பதவி உயர்வினை (Single Channel Promotion) அறிமுகப்படுத்துவதற்கான அனுமதி கீழ்கண்ட நிபந்தனைகளின்படி அளிக்கப்பட்டுள்ளது-

(i) ஒருவழி பாதை பதவி உயர்வினை அறிமுகப்படுத்தும்போது களப்பணியாளர்களின் பதவி உயர்வானது (அதாவது) Helper – Wireman/Commercial Assistant – Line Inspector/Commercial Inspector – Foreman I Grade – Special Grade Foreman எனவும்,

(ii) கம்பியாளர்(WM) மற்றும் வணிக உதவியாளர்(வஉ) பதவிகளிலிருந்து மின்பாதை ஆய்வாளர்(மஆ) மற்றும் வணிக ஆய்வாளர்(வஆ) பதவிகளில் பதவி உயர்வு அளிக்க அவ்விரு பதவிகளுக்கும் 5 வருட பணிக்கால அனுபவத்தை கொண்டு அடுத்த பதவி உயர்வு வழங்குவது எனவும், அதன் காரணமாக களப்பணியாளர்களின் அனைத்து பதவி உயர்வானது சீரான பணிக்கால அனுபவத்தை கொண்டது (uniformity practical experience) எனவும்,

(iii) தற்போது நடைமுறையிலுள்ள (அதாவது) கள உதவியாளர் பதவியிலிருந்து 10-ம் வகுப்பு வரை படித்தவர்கள் வணிக உதவியாளர் பதவிக்கு செல்ல விருப்ப படிவம் அளிக்கும் முறையினை நீக்குவது எனவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2) எனவே, தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாளர்களின் நலன்கருதி செயல்படும் 18 தொழிற்சங்கங்கள் (18 Nos. Trade Unions) களப்பணியாளர்களின் தற்போதைய இருவழிபாதை பதவி உயர்விற்கு பதிலாக ஒருவழிபாதை பதவி உயர்வினை மேற்கண்ட நிபந்தனையுடன் அறிமுகப்படுத்துவதற்கு தங்களின் ஒருமித்த கருத்தினை வரும் 31.05.2021-க்குள் அளிக்குமாறு இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பம்.///நாள்.06.05.2021.
(தெ.ரவிச்சந்திரன்)
தலைமை பொறியாளர்/பணியமைப்பு

# மின்வாரியத்தில் ஓய்வு பெறும் வயது 59லிருந்து 60 ஆக உயர்த்திய வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

TANGEDCO – Public services – Age of Superannuation of Government servants, Teachers, etc. – Increased from 59 years to 60 years – Orders issued by the Government – Adoption in TANGEDCO – Orders – Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(PER) FB TANGEDCO PROCEEDINGS NO. 8**

**DATED THE 3rd MAY, 2021.**
Chithirai-20, Pilava Varudam,
Thiruvalluvar Aandu-2052.

**READ:**

1. G.O.(Ms) No.51, P&AR (S) Department, dated 07.05.2020.
2. (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB), dated 28.05.2020.
3. (Per) FB TANGEDCO Proceedings No. 14 (SB), dated 28.05.2020.
4. G.O.(Ms) No.29, P&AR (S) Department, dated 25.02.2021.

**PROCEEDINGS:**

Based on the G.O. first read above, orders were issued increasing the age of superannuation of the Officers and Workmen of TANGEDCO from 58 to 59 years – vide Proceedings second and third read above, respectively.

**2.** The Government, in its G.O. fourth read above, have issued orders increasing the age of superannuation of Government servants from 59 years to 60 years. Further, it has been ordered therein that the said orders will be applicable to employees of the Government and Government Aided Educational Institutions, Legal and Constitutional Bodies, Public Sector Undertakings, Local Bodies, Commissions, Boards and Societies.

**3.** The Tamil Nadu Generation and Distribution Corporation Limited, after careful consideration, has decided to adopt the said orders of the Government in TANGEDCO. Accordingly, the Tamil Nadu Generation and Distribution Corporation Limited hereby orders that the age of superannuation of the officers/employees of TANGEDCO, be increased from 59 to 60 years. This will apply to all those who are in service as on date and due to retire on superannuation from 31.05.2021.

**4.** Necessary amendments to the Tamil Nadu Electricity Board Service Regulations will be issued separately.

**5.** The receipt of these proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**M.BHAVANI,**
**SECRETARY.**



# இறந்துபோன மின்ஊழியரை தூக்கி எறிந்த கிருஷ்ணகிரி வட்ட நிர்வாகம்

கடந்த 15.06. 2021 அன்று காலை சுமார் பத்தரை மணி அளவில் கிருஷ்ணகிரி வட்டம் ஓசூர் கோட்டம் பாகலூர் துணை மின் நிலையத்தில் மின் பாதை ஆய்வாளர் தோழர் நவாப்ஜான் பணியாற்றும் பொழுது மேலே சென்ற 33 கேவி மின் பாதையில் விபத்துக்குள்ளாகி துணை மின் நிலைய வளாகத்தில் உள்ள AB சுவிட்சில் இறந்து போனார்.

மேற்கண்ட பணியாளரை துணை மின் நிலைய வளாகத்தில் உள்ள ஸ்விச்யாடிலிருந்து இறக்கும் பொழுது முறையாக கயிறுகட்டி இறக்காமல் அந்தரங்கத்தில் இருந்து தூக்கி வீசும் காட்சி வீடியோவாக சமூகவலை தளத்தில் வந்து கொண்டிருக்கிறது. கீழே வீசும் பொழுது போர்வையால் பிடித்துக் கொண்டு இருப்பவர்கள் ஒரு முனையில் பிடித்துக் கொண்டவர்கள் பளு தாங்காமல் கையை விட்டுட இறந்து போன திரு நவாப்ஜான் உடல் கீழே விழுகிறது. இந்தக் காட்சியை வீடியோவில் பார்த்தவர்கள் மனம் பதறிப் போனார்கள்.

மின்வாரியத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றிய ஒரு ஊழியன் மின்வாரிய பணிக்காக பணி செய்கின்ற பொழுது மரணத்தை தழுவினார். அவருக்கு கொடுக்கும் மரியாதை கிருஷ்ணகிரி வட்ட நிர்வாகத்திற்கு தெரியாது போலும். தோழர் நவாப் ஜானின் உடலை AB சுவிட்சில் இறக்கின்ற பொழுது, உதவி செயற்பொறியாளர் அருகில் இருக்கிறார். இது கூட தெரியாத பொறியாளராக இருந்து என்ன பயன்!

தோழர் நவாப் ஜான், மின் பாதையாளராக நாரிகானபுரம் 110 KV. துணை மின்நிலையத்தில் பணி புரிந்து வந்தார். பாகலூர் துணை மின் நிலையத்தில் போதிய பணியாளர் இல்லாத சூழலில் உதவி செயற்பொறியாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்பேரில் கடந்த இரு மாதங்களாக பாகலூர் துணை மின் நிலையத்தில் பணி புரிந்து வருகிறார்..

பாகலூர் துணைமின் நிலையத்தில் முறை பணியில் உள்ள இயக்குனருக்கும் துணை மின் நிலையத்திற்கு பொறுப்பான உதவி மின் பொறியாளருக்கும் துணை மின் நிலையத்தில் மின்சாரம் செல்லுவது முழுமையாக தெரியவில்லை என அறிய முடிகிறது.



தோழர் நவாப்ஜான் மின் விபத்தில் இறந்து போனார். அவரது உடலை இறக்கும் பொழுது தூக்கி வீசிய வீடியோ காட்சியை கண்டதும் மின் ஊழியர் மத்திய அமைப்பு உடனடியாக தலைமை பொறியாளர் வேலூர் மண்டலம், இயக்குனர் வினியோகம், மற்றும் மின்வாரியத் தலைவர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

மின் விபத்திற்கான காரணத்தை கண்டறிந்து, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, திரு நவாப்ஜான் உடலை முறையாக கயிறு கட்டி இறக்காமல் மேலே இருந்து கீழே வீசுகின்ற செயலை அருகில் இருந்து வேடிக்கை பார்த்த உதவி செயற்பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

வாரிய நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் முறையான பாதுகாப்பு விதிகளையும் பயிற்சிகளையும் களப்பிரிவு ஊழியர்களுக்கு திரும்ப திரும்ப வழங்கி அறிவுறுத்தப் படவேண்டும்.

துணை மின் நிலையத்தில் பணியாற்றும் முறை பணி இயக்குனர்களுக்கும் பொறுப்பான உதவி மின் பொறியாளர்களுக்கும் தகுந்த அறிவுரையும் பாதுகாப்பு முறைகளையும் கற்றுக் கொடுப்பது அவசியம் என மின் ஊழியர் மத்திய அமைப்பு கருதுகிறது.



### செங்கல்பட்டு கிளையின் தலைவர்
## தோழர் **வி. முனிவேல்**
### காலமானார்

1987 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தில் ஐடிஐ கல்வி பயின்று அதன் மூலம் பணிநியமனம் பெற்று தற்சமயம் சிறப்பு நிலை முகவராக மின்வாரியத்தில் பணியாற்றி கடந்த 14.5.2021 அன்று கொரானா நோய் பாதிப்பில் மருத்துவ சிகிச்சையில் மருத்துவ மனையில் காலமானார். 1987 மின்வாரிய பணியில் சேர்ந்தது முதல் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பில் தன்னை உறுப்பினராக்கி கொண்டு அது முதற்கொண்டு நடத்துகின்ற அனைத்து இயக்கங்களை முழுமையாக பங்கு பெற்று படிப்படியாக பொறுப்புகளை பெற்று கிளைத் தலைவராக கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்ற அன்பு தோழர் காலமானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.



ராமநாதபுரம்
கிளை செயலாளர்
### தோழர் **எம்.குமார்**
காலமானார்

தோழர் எம். குமார் அவர்கள் கே 2 ஒப்பந்த தொழிலாளராக மின்வாரியத்தில் நுழைந்தார் அவரது தந்தை சர்புதீன் ஒரு நாட்டுப்புற பாடகர். தோழர் குமார் அவர்கள் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தர படுத்த மத்திய அமைப்பு நடத்திய அனைத்து போராட்டங்களிலும் முன்னணியில் இருந்து போராடியவர். 2007 ஆம் ஆண்டு மதிப்பீட்டாளர் தரம் 2ஆக மின்வாரிய பணியில் நுழைந்தார், ராமநாதபுரம் கிளையில் கிளைச் செயலாளர், கிளைப் பொருளாளர் மற்றும் மாவட்டத்தில் பல பொறுப்புகளை திறம்பட செய்து வந்தார். 24.4.2021 அன்று நடைபெற்ற ராமநாதபுரம் கிளை மாநாட்டில் மீண்டும் கிளைச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

தோழர் குமார் அவர் களுக்கு மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் 13.5.2021 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது மறைவு மத்திய அமைப்பிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.



திண்டுக்கல் கிளையின் முன்னணி தலைவராகவும், முன்னால் செயலாளராக திறம்பட செயல்பட்ட தோழர் சாமுவேல் அவர்கள் கொறானா தொற்று காரணமாக காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



கடலூர் மின் வட்டம் சிதம்பரம் கோட்டம் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு உறுப்பினராகவும் கோட்ட செயலாளராகவும் கிளையின் சிறப்புத் தலைவராகவும் செயல்பட்ட தோழர் எஸ். முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் கொரானா என்னும் கொடிய நோயினால் 8.6.2021 அன்று காலமானார் என்பதை வருத்ததுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடலூர் மின் வட்டக் கிளையின் இணைச் செயலாளர்
தோழர் எம். குணசேகரன் அவர்கள்
கொரானா நோய் தொற்றின் காரணமாக காலமானார்
என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# கொரானா பாதித்த மக்களுக்கு நிவாரண பணிகளில் மின்ஊழியர் மத்திய அமைப்பின் முன்னணி தலைவர்கள்



Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 10.06.2021




Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian